بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 5 | இதழ் 46

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

25 ரபீவுல் அவ்வல் 1442 ஹிஜ்ரி கமரி ★ 12 நுபுவ்வத் 1399 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி ★ 12 நவம்பர் 2020


## அல்லாஹ்வின் கட்டளை

وَمَنۡ یَّکۡسِبۡ خَطِیۡٓـَٔۃً اَوۡ اِثۡمًا ثُمَّ یَرۡمِ بِہٖ بَرِیۡٓـًٔا فَقَدِ احۡتَمَلَ بُہۡتَانًا وَّ اِثۡمًا مُّبِیۡنًا○

(அந்நிஸா : 113)

*மேலும் ஒருவர் ஒரு தவற்றையோ அல்லது பாவத்தையோ செய்து விட்டு, அதனைக் குற்றமற்ற ஒருவரின் மேல் சுமத்தினால், நிச்சயமாக அவர் பொய்க் குற்றச்சாட்டையும், தெளிவான பாவத்தையும் சுமக்கிறார்.*

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**வெளிப்புறத் தோற்றத்தை வணங்கியதால் யூதர்களுக்கு வந்த ஆபத்து, அவர்கள் மஸீஹ் [அலை] அவர்களை மறுத்துக் கொண்டே சென்றனர். இந்த சோதனைதான் நமது காலத்தின் மவ்லவிகளுக்கும், முல்லாக்களுக்கும் ஏற்பட்டது. மஸீஹ், மஹ்தி வந்து போர் செய்வார் என எதிர்பார்க்கின்றனர்.**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...**

### ‘அபூலஹப்’ மற்றும் ‘ஹம்மா லதல் ஹதப்’ என்பதன் கருத்து

‘அபூலஹ்’ என்பது திருக்குர்ஆனில் பொதுவானதாகும். சிறப்பானதல்ல. முதல் கருத்து, கொளுந்து விட்டெரியும் இயல்பு கொண்டவர். அவ்வாறே ‘ஹம்மா லதல் ஹதப்’ விறகை சுமக்கும் பெண் என்பதன் கருத்து, அமைதியைக் குலைப்பவள் ஆவாள். நெருப்பை மூட்டும் வேலை, புறம் பேசுகின்ற பெண்களினால் மக்களில் தீங்கை அதிகமாக்குகிறது..........

உலக செல்வமும், ஆட்சியும் பொறாமை கொள்ள வைப்பதில்லை. மாறாக பேராசையின் அந்தஸ்து துஆவாகும். நான் எனது இங்கு இருக்கக்கூடிய, இங்கு இல்லாதவர்–களுடையவர்களின் எவர்களுடைய பெயர் எனது நினைவுக்கு வந்ததோ அவர்களுக்காக இன்று அதிமாக துஆ செய்தேன். எவ்வளவு துஆ செய்தேன் என்றால், அது காய்ந்த விறகுகளின் மீது செய்யப்பட்டிருந்தால் அது பசுமையாகி இருக்கும். நமது சகோதரர்களுக்கு இது மாபெரும் அடையாளமாகும்............

### வெளிப்புறத்தை வணங்குவது வழிகேட்டுக்குக் காரணமாக அமையும்

வெளிப்புறத் தோற்றத்தை வணங்கியதால் யூதர்களுக்கு வந்த ஆபத்து, அவர்கள் மஸீஹ் (அலை) அவர்களை மறுத்துக் கொண்டே சென்றனர். அது மட்டுமின்றி, நமது நபி (ஸல்) அவர்களையும் மறுத்துக் கொண்டே சென்றனர். (யூதர்களாகி) அவர்கள் மஸீஹ் வருவார்; மன்னராக வருவார். மேலும் மிகவும் மகத்துவத்துடன் தாவீதின் அரியணையில் அமர்வார். அவர் வருவதற்கு முன் வானத்திலிருந்து எலியா வருவார். ஆனால் மஸீஹ் வந்தபோது யோவானை எலியா என்று கூறினார். மேலும் (இயேசுவாகிய) அவர் மன்னராவதற்குப் பதிலாக மனிதன் தலை சாய்க்க இடமில்லை என்ற அளவுக்கு பணிவைக் காட்டினார்.

இப்போது வெளிப்புறத்தை நம்பும் யூதர்கள் அவரை எப்படி ஏற்றுக் கொள்வார்கள்? எனவே அவர்கள் மிகவும் கடினமாக அவரை மறுத்து விட்டனர்; இப்போது வரை மறுத்துக் கொண்டிருக்கின்றனர். நமது காலத்திலுள்ள மவ்லவிகளுக்கும், முல்லாக்களுக்கும் இதே சோதனைதான் வந்தது. மஸீஹ், மஹ்தி வந்து போர் புரிவார் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் இறைவன் இந்த விஷயத்தையே கவனத்தில் கொள்ளவில்லை. மேலும் புகாரி يَضَعُ الۡحَرۡبَ ‘யழவுல் ஹர்ப் – அவர் போரை நிறுத்துவார்’ எனக் கூறி இந்த கதையையே முடித்து விட்டது. அப்படி இருந்தும் இவர்கள் அமைதியையும், நிம்மதியையும் விரும்புபவரை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 220–221 காதியான் பதிப்பு 2018)

## நபிமொழிகள்

**வெள்ளிக்கிழமை நாளில் குளிப்பது, பல் துலக்குவது, நறுமணம் பூசுவது ஆகியவற்றின் சிறப்பு**

**ஹதீஸ் எண்: 877**

*ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் வெள்ளிக்கிழமை வரும்போது அவர் குளிக்க வேண்டும்.*

**ஹதீஸ் எண்: 879**

*ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரீ குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஜுமுஆ நாளில் குளிப்பது வயதுக்கு வந்த ஒவ்வொருவரின் மீதும் கடமையாகும்.*

**ஹதீஸ் எண்: 880**

*ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: வெள்ளிக் கிழமை குளிப்பது ஒவ்வோர் இளைஞருக்கும் கடமையாகும். மேலும் அவர் பல் துலக்க வேண்டும்; நறுமணமும் பூச வேண்டும்.*

*(ஹஸ்ரத் ஸய்யிது ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் கூறுகிறார்கள்: அதாவது வெள்ளிக்கிழமை குளிப்பது சிறப்பைப் பொருத்தவரை கடமை ஆகும். அவ்வாறே பல் துலக்குவது; நறுமணம் பூசிக் கொள்வதும் கடமை ஆகும். இந்த எல்லா விஷயங்களும் சிறப்பு என்ற முறையில் அவசிய–மானவையாகும். ஆனால் அவை இன்றி தொழுகையே கூடாது என்ற அளவுக்கு கடமையல்ல.)*

*(ஸஹீஹ் புகாரி கிதாபுல் ஜுமுஆ காதியான் பதிப்பு 2006)*


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இவ்வுலகிலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக் கூடிய, மவுலகிலும் அவனுடைய திருப்தியைப் பெறக் கூடியவர்களாகிய இவர்கள் எவ்வளவு நற்பேறு பெற்றவர்களாவர்!**

**உம்மத்தின் அமீன் (நம்பிக்கைக்குரியவரும்) சுவர்க்கத்தின் நற்செய்தி வழங்கப்பட்டவர்களைச் சேர்ந்தவராகவும், நபி (ஸல்) அவர்கள் மகத்தான அந்தஸ்தைக் கொடுத்தவரும், பத்ர் போரில் கலந்து கொண்டவருமாகிய ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகள் பற்றிய குறிப்புகள்.**

*பேராசிரியர் டாக்டர் நயீமுத்தீன் பஷாவரில் ஷஹீதானவர், ஜெர்மனியிலுள்ள ஜாமிஆ மாணவராகிய எனது அன்பிற்குரிய உஸாமா சாதிக் பின் முஹம்மது சாதிக், யூ.கே ஜாமிஆ அஹ்மதிய்யாவின் ஆசிரியராகிய மதிப்பிற்குரிய சலீம் அஹ்மது மாலிக் ஆகியோரைப் பற்றிய நற்குறிப்புகள், ஜனாஸா காயிப் தொழுகை.*

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 9 அக்டோபர் 2020**
அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **இகா** மாதம் **9 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ- بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-
اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ- اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ-

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களைப் பற்றி கூறப்பட்டு வந்தது. அதனுடைய மீதமுள்ள பகுதி இன்றும் எடுத்துரைக்கப்படும். யர்மூக் போர் நடைபெற்றது. அதன் பெயர் வரக் காரணம் என்னவென்றால், யர்மூக் என்பது சிரியாவின் சுற்றுப் புறத்திலுள்ள ஒரு பள்ளத்தாக்கின் பெயராகும். ஹிஜ்ரி 15 ஆம் ஆண்டில் சிரியாவிலுள்ள யர்மூக் பள்ளத்தாக்கில், யர்மூக் நதிக்கரை ஓரத்தில் ஒரு மிகப் பெரிய யுத்தம் நடைபெற்றது. பாஹான் என்பவன் உடைய தலைமையில் ஏறக்குறைய ஒன்றரை இலம்சம் படை வீரர்களை ரோமானியர்கள் போர்க்களத்தில் இறக்கியிருந்தார்கள். அவர்களுக்கு எதிராக ஏறக்குறைய 30 ஆயிரம் முஸ்லிம்கள் இருந்தனர். அவர்களில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் ஆயிரம் பேர் இருந்தார்கள். மேலும் அவர்களுள் பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபாக்கள் 100 பேர் இருந்தனர். ஆலோசனைக்குப் பிறகு ஹிமஸ் என்ற இடத்திலிருந்து முஸ்லிம்கள் தமது படைகளை தற்காலிகமாக திரும்ப அழைத்துக் கொண்டனர். நாங்கள் தற்காலிகமாக உங்களைப் பாதுகாப்பதிலிருந்து பின் வாங்குகிறோம். ஆகவே உங்களுடைய ஜிஸ்யா – வரி உங்களுக்கு திரும்பக் கொடுக்கப்படுகிறது என கிறிஸ்தவர்களிடம் கூறினர். அதாவது அவர்களிடமிருந்து வாங்கப்பட்ட வரி அவர்களுக்கு திரும்பக் கொடுக்கப்பட்டது. எந்த நோக்கத்திற்காக இந்த வரி வாங்கப்பட்டதோ அந்த வேலையை நான் செய்ய இயலாது என்று கூறினர். ஆகவே ஹிமஸைச் சார்ந்த மக்களுக்கு அவர்களுடைய வரி திரும்பக் கொடுக்கப்பட்டது. அந்தத் தொகை பல இலட்சமாக இருந்தது.

அந்தத் தொகை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டபோது முஸ்லிம்களின் வாய்மை மற்றும் நீதியைக் கண்டு கிறிஸ்தவர்கள் அழுதார்கள். 'கருணையுள்ளம் கொண்ட முஸ்லிம் ஆட்சியாளர்களே! இறைவன் உங்களை மீண்டும் கொண்டு வருவானாக' என்று வீட்டின் கூரைகளின் மேலேறி அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்.

முஸ்லிம்கள் ஹமஸிலிருந்து பின்வாங்கியதன் காரணமாக ரோமானியர்களுக்கு இன்னும் துணிவு அதிகரித்தது. அவர்கள் ஒரு மிகப்பெரும் படையுடன் யர்மூக் வந்தடைந்து முஸ்லிம்களை எதிர் கொள்ள முகாமிட்டிருந்தனர். ஆனால் உள்ளத்தில் முஸ்லிம்களின் ஈமானிய உத்வேகத்தைக் கண்டு பயந்துபோயும் இருந்தனர். ஆகவே சமாதானத்திற்கும் ஆவல் கொண்டிருந்தனர். சமாதானம் ஏற்பட்டு விட வேண்டும் எனவும் முயற்சித்தனர்.

ரோமானியர்களின் படைத் தளபதியான பாஹான் இஸ்லாமிய படையை நோக்கி ஜார்ஜ் என்ற ஒரு ரோமானிய தூதுவரை அனுப்பி வைத்தான். அவர் இஸ்லாமிய படையை வந்தடைந்த நேரத்தில், முஸ்லிம்கள் மக்ரிப் தொழுது கொண்டிருந்தனர். முஸ்லிம்களின் பணிவு, உருக்கம் மற்றும் இறைவனுக்கு முன்னால் ஸஜ்தா செய்யும் காட்சியைக் கண்டு அவர் மிகுந்த தாக்கத்திற்கு உள்ளானார். அவர் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்டார். அதில் ஒன்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன? என்பதாகும். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் திருக்குர்ஆனின் இவ்வசனத்தை ஓதினார்கள்:

يٰۤاَهْلَ الْكِتٰبِ لَا تَغْلُوْا فِيْ دِيْنِكُمْ وَلَا تَقُوْلُوْا عَلَى اللّٰهِ اِلَّا الْحَقَّ ؕ اِنَّمَا الْمَسِيْحُ عِيْسَى ابْنُ مَرْيَمَ رَسُوْلُ اللّٰهِ وَ
كَلِمَتُهٗ ۚ اَلْقٰهَاۤ اِلٰى مَرْيَمَ وَرُوْحٌ مِّنْهُ ۫ فَاٰمِنُوْا بِاللّٰهِ وَرُسُلِهٖ ۚ وَلَا تَقُوْلُوْا ثَلٰثَةٌ ؕ اِنْتَهُوْا خَيْرًا لَّكُمْ ؕ اِنَّمَا اللّٰهُ اِلٰهٌ
وَّاحِدٌ ؕ سُبْحٰنَهٗۤ اَنْ يَّكُوْنَ لَهٗ وَلَدٌ ۘ لَهٗ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ؕ وَكَفٰى بِاللّٰهِ وَكِيْلًا

"வேதத்தையுடையவர்களே! நீங்கள் உங்கள் மார்க்க (விஷய)த்தில் வரம்பு மீறாதீர்கள். அல்லாஹ்வைப் பற்றி உண்மையைத் தவிர வேறெதனையும் கூறாதீர்கள். நிச்சயமாக மர்யமின் மகன் ஈஸா மஸீஹ் அல்லாஹ்வின் தூதரும், அவன் மர்யமுக்கு அருளிய அவனது நற்செய்தியுமாகும். மேலும் அவனிடமிருந்துள்ள ஓர் அருளும் ஆகும். எனவே நீங்கள் அல்லாஹ்விடத்தும், அவனுடைய எல்லாத் தூதர்களிடத்தும் நம்பிக்கை கொள்ளுங்கள். (கடவுள்) மூன்று எனக் கூறாதீர்கள். அவ்வாறு கூறுவதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். இது உங்களுக்கு நல்லது. நிச்சயமாக வணக்கத்திற்குரிய ஒருவன் அல்லாஹ் மட்டுமே. அவனுக்கு மகன் உண்டு என்பது அவனது தூய்மைக்கு அப்பாற்பட்டது. வானங்களில் உள்ளவை, பூமியில் உள்ளவை (எல்லாம்) அவனுக்கே உரியனவாகும். பாதுகாப்பாளனாக விளங்க அல்லாஹ்வே போதுமானவன்." (திருக்குர்ஆன் 4:172)

அதன் பின்னர் அடுத்த வசனத்தை ஓதினார்கள்:

لَنْ يَّسْتَنْكِفَ الْمَسِيْحُ اَنْ يَّكُوْنَ عَبْدًا لِّلّٰهِ وَلَا الْمَلٰٓئِكَةُ الْمُقَرَّبُوْنَ ؕ

"நிச்சயமாக மஸீஹும் (அல்லாஹ்வுக்கு) நெருக்கமான வானவர்களும் அல்லாஹ்வின் ஓர் அடியாரா(க எண்ணப்படு)வதை ஒருபோதும் அற்பமாகக் கருதமாட்டார்கள்." (திருக்குர்ஆன் 4:173)

ஜார்ஜ் அவர்கள் திருக்குர்ஆனின் இப்போதனைகளைக் கேட்ட போது, சந்தேகத்திற்கிடமின்றி ஈஸாவின் நற்பண்புகள் இவையே ஆகும் எனக் கூறினார். உங்களுடைய தூதர் உண்மையாளர் எனக்

கூறி பிரதிநிதியாக வந்த அவர் முஸ்லிமாகி விட்டார். இப்போது அவர் தனது படைக்கு திரும்பிச் செல்ல விரும்பவில்லை. ஆனால் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள், வாக்குறுதியை மீறியதாக ரோமானியர்கள் கருதக்கூடும். ஆகவே நீங்கள் திரும்பிச் செல்லுங்கள். நாளை இங்கிருந்து தூதுவர் செல்வார். அவருடன் நீங்கள் வந்து விடுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் கிறிஸ்தவ படையினருக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுத்தார்கள். மேலும் இஸ்லாமிய சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் இஸ்லாமிய நல்லொழுக்கங்களை அவர்களுக்கு முன்னால் எடுத்து வைத்தார்கள். அடுத்த நாள் ஹஸ்ரத் காலிது அவர்கள் எதிரணியிடம் சென்றார்கள். ஆனால் நல் விளைவு ஒன்றும் ஏற்படவில்லை. மேலும் போருக்கான ஆயத்தப் பணிகள் துவங்கின. படைக்குப் பின்னால் முஸ்லிம் பெண்கள் இருந்தார்கள். அவர்கள் போரில் படைவீரர்களுக்கு தண்ணீர் புகட்டி வந்தார்கள்; காயமுற்றவர்களை கவனித்து வந்தார்கள்; வீரர்களுக்கு உத்வேகம் வழங்கி வந்தார்கள். அப்பெண்களுள் ஹஸ்ரத் அஸ்மா பின்த் அபீபக்ர், ஹஸ்ரத் அபூஸுஃப்யான் அவர்களின் மனைவி ஹஸ்ரத் ஹிந்த் பின்த் உத்பா போன்றவர்களும் இருந்தார்கள். இவர்கள் மக்கா வெற்றியின்போது முஸ்லிமானவர்கள். இவர்களைத் தவிர ஹஸ்ரத் உம்மே அபான் போன்ற பெண்களும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் போர் ஆரம்பிப்பதற்கு முன்பு முஸ்லிம் பெண்களைப் பார்த்து, பெண் போராளிகளே! கூடாரங்களின் உத்திரங்களை உருவி கைகளில் வைத்துக் கொள்ளுங்கள்; கற்களைக் கொண்டு உங்களுடைய பைகளை நிரப்பிக் கொள்ளுங்கள்; போர் புரிவதற்கு முஸ்லிம்களை உத்வேகப்படுத்துங்கள். இன்று உங்களுக்கு போர் உள்ளது. நீங்கள் புறமுதுகு காட்டி விடக் கூடாது என்று அவர்களிடம் கூறுங்கள். வெற்றி பெறுவதைக் கண்டால் நீங்கள் உங்களது இடத்திலேயே அமர்ந்திருங்கள். ஆனால் முஸ்லிம்கள் பின்வாங்குவதைக் கண்டால் அவர்களுடைய முகத்தில் உத்திரங்களைக் கொண்டு அடியுங்கள். கற்களை எறிந்து அவர்களை போர்க்களத்திற்கு திருப்பி அனுப்புங்கள். உங்களது குழந்தைகளை உயர்த்திப் பிடித்துச் செல்லுங்கள். உங்களுடைய மனைவி மக்களுக்காகவும், இஸ்லாத்திற்காகவும் உயிரைக் கொடுத்து விடுங்கள் என ஆண்களைப் பார்த்துக் கூறுங்கள் என்றார்கள்.

அதன் பிறகு ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் ஆண்களைப் பார்த்து, அல்லாஹ்வின் அடியார்களே! இறைவனுக்கு உதவி புரிவதற்காக முன்னேறுங்கள். அவன் உங்களுக்கு உதவி புரிவான். உங்களுடைய பாதங்களுக்கு உறுதியை வழங்குவான். அல்லாஹ்வின் அடியார்களே! பொறுமையை மேற்கொள்ளுங்கள். பொறுமைதான் நிராகரிப்பிலிருந்து இரட்சிப்பு வழங்கக் கூடியதும், இறை விருப்பத்திற்குக் காரணியாகவும், வெட்கமின்மையைக் கழுவக் கூடியதாகவும் உள்ளது. உங்களது வரிசைகளை முறித்து விடாதீர்கள். போரை நீங்கள் ஆரம்பிக்காதீர்கள். இறைவன் தன்னுடைய விருப்பத்தை முழுமைப்படுத்தும் பொருட்டு ஈட்டிகளை கையில் எடுத்துக் கொள்ளுங்கள். கேடயங்களைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். இறை நினைவில் நாவுகளை மூழ்க விடுங்கள். சண்டையை நீங்கள் ஆரம்பிக்கக் கூடாது. ஆனால் போர் தொடுக்கப்படும்போது, பிறகு புறமுதுகு காட்டக் கூடாது என்று கூறினார்கள்.

எதிரிகளின் படைக்கு முன்னால் அப்போது தங்கத்தினால் ஆன சிலுவை வைக்கப்பட்டிருந்தது. அவர்களுடைய ஆயுதங்களின் பளபளப்பு கண்களைக் கூசச் செய்தது. அவர்கள் தலை முதல் பாதம் வரை உலோகத்தால் மூழ்கியிருந்தார்கள். அதாவது, கவச உடைகளை அணிந்திருந்தார்கள். போர்க்களத்தை விட்டு ஓட மாட்டோம் என்று அந்நாளில் அவர்கள் தமது கால்களில் சங்கிலிகளையும் அணிந்திருந்தார்கள். கொல்வோம்; அல்லது கொல்லப்படுவோம் என்று உறுதி கொண்டிருந்தனர். பாதிரிகள் இஞ்சீலுடைய மேற்கோள்களைப் படித்துக் காட்டி அவர்களுக்கு உத்வேகத்தை வழங்கிக் கொண்டிருந்தனர்.

நிராகரிப்பாளர்களின் படை கடல் அலைகளைப் போன்று முன்னேறியது. அது இரண்டரை இலட்சம் படை வீரர்களைக் கொண்ட படையாக இருந்தது. முஸ்லிம்கள் வெறும் 30 ஆயிரம் பேர் மட்டுமே இருந்தனர். போர் ஆரம்பமானது. ஆரம்பத்தில் ரோமானியர்களின் கை ஓங்கியிருந்தது. அவர்கள் முஸ்லிம்களை தள்ளிக் கொண்டு வர ஆரம்பித்தனர். முஸ்லிம்களுள் சஹாபாக்கள் யார்? என கிறிஸ்தவர்கள் இரகசியமாக அறிந்து வைத்திருந்தனர். அம்பு எய்தக் கூடிய சிலரை ஒரு குன்றின் மீது நியமித்து, தமது அம்புகளினால் குறிப்பாக சஹாபாக்களைக் குறி வைக்குமாறு கூறி இருந்தார்கள். பெரும் பெரும் மனிதர்கள் கொல்லப்பட்டு விட்டால், பிறகு மீதமுள்ள படையினரின் உள்ளம் தாமாகவே உடைந்து விடும்; அவர்கள் களத்தை விட்டு ஓடி விடுவார்கள் என்பதை எதிரிகள் அறிந்திருந்தார்கள். இதன் விளைவாக பல சஹாபாக்கள் கொல்லப்பட்டார்கள். பலருடைய கண்களும் வீணாகி விட்டன. இந்நிலையை அபூஜஹிலின் மகனாகிய இக்ரிமா அவர்கள் கண்டார்கள். இக்ரிமா அவர்கள் மக்கா வெற்றியின்போது முஸ்லிம் ஆனார்கள். மக்கா வெற்றியின் நாளில் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்து, நான் இதற்கு முன்பு செய்த செயல்களுக்கு பரிகாசம் செய்ய எனக்கு வாய்ப்பு கிடைப்பதற்கு தாங்கள் துஆ செய்யுங்கள் என்று வேண்டியிருந்தார். இவர் தனது சில தோழர்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களிடம் சென்றார். சஹாபாக்கள் பெரும் தொண்டாற்றி விட்டனர். பின்னால் வந்த எங்களுக்கு நன்மையைப் பெறுவதற்கு இப்பொழுது வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். நாங்கள் (எதிர்) படையின் மையப்பகுதியில் தாக்குதல் தொடுப்போம். மேலும் கிறிஸ்தவ தளபதிகளைக் கொன்று விடுவோம் என்று விண்ணப்பித்தனர்.

இது மிக அபாயகரமான விஷயமாகும். இவ்வாறு நடந்து கொண்டால், அங்கு செல்லக்கூடிய அனைத்து இளைஞர்களும் கொல்லப்பட்டு விடுவார்களே! என ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு அவர்கள், நீங்கள் கூறுவது சரிதான்! ஆனால் இதைத் தவிர வேறு வழி ஒன்றும் இல்லையே. இளைஞர்களான நாங்கள் பிழைத்துக் கொள்ள வேண்டும் எனவும், சஹாபாக்கள் கொல்லப்பட வேண்டும் எனவும் நீங்கள் விரும்புகிறீர்களா? எனக் கேட்டார்.

புதிதாக முஸ்லிமான இவர்களிடத்தில் ஓர் ஈமானிய உத்வேகம் காணப்பட்டது; அல்லாஹ்வுக்காக உயிரைத் தியாகம் செய்ய ஒரு துடிப்பு காணப்பட்டது. 400 படை வீரர்களுடன் எதிரியுடைய படையின் மையப் பகுதியில் தாக்குதல் நடத்த அனுமதி வேண்டி மீண்டும் மீண்டும் இக்ரிமா அவர்கள் சென்றார்கள். இறுதியில் அவரது வற்புறுத்தலின் காரணமாக அபூ உபைதா (ரலி) அவர்கள் அவருக்கு அனுமதி வழங்கினார்கள். அவர்கள் படையினுடைய மையப் பகுதியில் தாக்குதல் தொடுத்தார்கள். மேலும் அப்படையைத் தோற்கடித்தார்கள். ஆனால் அந்தப் போரில் அவர்களில் பெரும்பான்மையான இளைஞர்கள் ஷஹீதாகி விட்டார்கள். ரோமானியர்கள் தமக்குப் பின்னால் தோண்டி வைத்த அகழியை நோக்கி அவர்களை முஸ்லிம்கள் தள்ளிக் கொண்டு சென்றார்கள். யாரும் ஓடி விடக் கூடாது என அவர்கள் தம்மைத் தாமே சங்கிலியால் இணைத்தும்

இருந்தார்கள். ஆகவே அவர்கள் அடுத்தடுத்து அந்தக் குழிகளுக்குள் விழுந்து கொண்டே சென்றார்கள்.

ஒருவன் விழும்போது தம்முடன் 10 பேரை உடன் இழுத்துக் கொண்டே விழுவான். 80 ஆயிரம் நிராகரிப்பாளர்கள் பின்னால் நகர்ந்து செல்லும்போது யர்மூக் நதியில் மூழ்கி இறந்து போனார்கள். ஒரு இலட்சம் ரோமானியர்களை போர்க்களத்தில் முஸ்லிம்கள் கொன்றனர். ஏறக்குறைய மூவாயிரம் முஸ்லிம்கள் ஷஹீதானார்கள். இதுதான் யர்மூக் யுத்தமாகும்.

(ரோஷன் ஸிதாரே – குலாம் பாரீ ஸைஃப் சாஹிப் தொகுதி 2 பக்கம் 21–25. தஃப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 181. முஃஜமுல் புல்தான் தொகுதி 5 பக்கம் 497 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத்)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது பற்றி எடுத்துரைக்கும்போது குறிப்பாக போரின் இறுதித் தருணம் குறித்து கூறுகிறார்கள்:

போர் முடிவடைந்தபோது முஸ்லிம்கள் குறிப்பாக இக்ரிமா மற்றும் அவருடைய தோழர்களைத் தேடினார்கள். அவர்களில் 12 பேர் கடுமையாகக் காயமுற்றிருப்பதைக் கண்டார்கள். அவர்களில் இக்ரிமா அவர்களும் ஒருவராக இருந்தார். ஒரு முஸ்லிம் படை வீரர் அவரிடத்தில் வந்தார். இக்ரிமா அவர்களின் நிலை மிக மோசமாக இருப்பதைக் கண்டார். இக்ரிமாவே! என்னிடத்தில் நீர்ப்பை உள்ளது. நீங்கள் கொஞ்சம் நீர் அருந்துங்கள் என்றார். இக்ரிமா அவர்கள் சுற்றுமுற்றும் பார்த்தபோது, ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களின் மகன் ஹஸ்ரத் ஃபஸ்ல் அவர்கள் காயமுற்றுக் கிடப்பதைக் கண்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நான் கடுமையாக எதிர்த்துக் கொண்டிருக்கும்போது எவர்கள் அன்னாருக்கு உதவி புரிந்தார்களோ அவர்கள் தாகத்தால் மரணித்து, நான் நீர் அருந்தி உயிரோடு இருப்பதை எனது தன்மானம் பொறுத்துக் கொள்ள இயலாது என்று அந்த முஸ்லிமிடம் கூறினார். பரஸ்பரம் தியாகத்தின் ஒரு புதிய உணர்வு தோன்றியிருந்தது. ஆகவே முதலில் அவருக்கு தண்ணீர் கொடுங்கள். அதாவது ஹஸ்ரத் ஃபஸ்ல் பின் அப்பாஸ் அவர்களுக்கு தண்ணீர் கொடுங்கள். பிறகு ஏதாவது எஞ்சி இருந்தால் என்னிடம் கொண்டு வாருங்கள் என்றார். அந்த முஸ்லிம் ஹஸ்ரத் ஃபஸ்ல் அவர்களிடம் சென்றார். அவர் காயமுற்ற இன்னொருவரைச் சுட்டிக் காட்டி அவருக்கு முதலில் தண்ணீர் கொடுங்கள். அவர் என்னை விட அதிக உரிமையுடையவர் என்று கூறினார். காயமுற்ற அவரிடத்தில் சென்றபோது அவர் காயமுற்ற இன்னொரு நபரைச் சுட்டிக் காட்டி, அவர் என்னை விட அதிக உரிமையுடையவர்; ஆகவே அவருக்கு முதலில் தண்ணீர் புகட்டுங்கள் என்றார். இவ்வாறு அந்த முஸ்லிம் எந்தப் படை வீரரிடம் சென்றாலும் அவர் இன்னொரு நபரிடம் இவரை அனுப்பி வைத்து விடுவார். எவரும் குடிக்கவில்லை. இவர் காயமுற்ற கடைசி நபரிடம் சென்றபோது, அவர் இறந்து போயிருந்தார். இவர் இன்னொரு நபரிடம் திரும்பி வந்தார். அவரும் இறந்து போயிருந்தார். இவ்வாறு இக்ரிமா வரையிலும் திரும்ப வந்தார். அப்போது அவர்கள் அனைவரும் இறந்து போயிருந்தனர்.

(ஹர் அஹ்மதி அவ்ரத் அஹ்மதிய்யத் கீ சதாகத் கா ஏக் ஸந்தா நிஷான் ஹே. அன்வாருல் உலூம் தொகுதி 26 பக்கம் 230–231)

சிரியா மக்கள் பல்வேறு மார்க்கங்களைப் பின்பற்றக் கூடியவர்களாக இருந்தார்கள். மொழிகளும் வேறுபட்டதாக இருந்தது. அவர்களின் மரபுகளும் பல்வேறு வகையானதாக இருந்தன. ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள், மக்களிடத்தில் நீதியையும் சமத்துவத்தையும் நிலைநாட்டினார்கள். அமைதியையும், நிம்மதியையும் மீண்டும் நிலைபெறச் செய்தார்கள். ஒவ்வொருவருக்கும் மார்க்க சுதந்திரத்தை வழங்கினார்கள். எல்லா மக்களும் ஆதமின் சந்ததிகள் ஆவோம். அனைவரும் சகோதரர்கள் ஆவோம். மனிதர்கள் என்ற அடிப்படையில் எந்த வேறுபாடும் இல்லை என்ற இஸ்லாமிய ஆன்மாவை நடைமுறைப்படுத்தினார்கள்.

நிர்பந்தம் செய்து முஸ்லிம்களாக மாற்றப்பட்டனர் என்றும் சில சமயங்களில் தவறான குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது. ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் ரோமானியர்களுக்கு மார்க்க சுதந்திரத்தை வழங்கினார்கள். கோத்திரங்களை அடையாளம் காட்டினார்கள். அமைதியையும் நிம்மதியையும் நிலைநாட்டினார்கள். மார்க்க சுதந்திரத்தை நிலைபெறச் செய்தார்கள்.

சிரியாவில் குடியமர்ந்து கிறிஸ்தவ மார்க்கத்தைப் பின்பற்றக் கூடிய அரபு நாட்டினர் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் முயற்சியினாலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். தப்லீகால் வந்தனர். வலிமையினால் வரவில்லை. இதைத் தவிர முஸ்லிம்களின் முன்னுதாரணத்தைக் கண்டு வந்தனர். இதுபற்றி முன்னால் கூறப்பட்டு விட்டது. மேலும் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களுடைய நல்லொழுக்கத்தால் தாக்கத்திற்குள்ளாகி ரோமானியர்களும், கிறிஸ்தவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.

யர்மூக் போர் வெற்றிக்கு சில நாட்களுக்கு முன்பு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணமடைந்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். சிரியாவை கண்காணிக்கும் பொறுப்பையும், படைத் தலைமையையும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அபூ உபைதா அவர்களின் பொறுப்பில் ஒப்படைத்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நியமன கடிதம் அபூ உபைதா அவர்களிடத்தில் வந்தடைந்தபோது, முழு வீச்சில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆகவே அபூ உபைதா அவர்கள் அதை வெளிப்படுத்தவில்லை. ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்கள் அப்போது படைத்தளபதியாக இருந்தார்கள். அவர்களுக்கு இவ்விஷயம் தெரிய வந்தபோது, தன்னிடமிருந்து இச்செய்தி ஏன் மறைக்கப்பட்டது? எனக் கேட்டார்கள். அதற்கு அபூ உபைதா அவர்கள், நாம் எதிரிகளுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தோம். எந்த வகையிலும் உங்களுடைய உள்ளம் புண்பட நான் விரும்பவில்லை என்று கூறினார்கள்.

முஸ்லிம்கள் வெற்றியடைந்த பிறகு ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்களின் படை ஈராக்கிற்கு திரும்பிச் செல்ல ஆயத்தமானபோது, ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்களை சிறிது நேரம் தம்மிடத்தில் இருக்கச் செய்தார்கள். அவர்கள் புறப்படத் தயாரானபோது ஹஸ்ரத் காலித் பின் வலீது அவர்கள் மக்களைப் பார்த்து, இந்த சமுதாயத்தின் நம்பிக்கைக்குரியவர் உங்களுடைய தலைவராக இருப்பதில் நீங்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்றார்கள். அதாவது அபூ உபைதா அவர்களைச் சுட்டிக் காட்டி இவ்வாறு கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள், காலித் பின் வலீது இறைவனுடைய வாள்களுள் ஒரு வாள் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என்றார்கள்.

சுருக்கமாக, இவ்வாறு நேசம் மற்றும் கண்ணியத்தின் சூழலில் இந்த இரு தலைவர்களும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தனர். (ரோஷன்

**திருக்குர்ஆனிலிருந்து...**

**நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரக ஆழத்தின் அடிமட்டத்தில் இருப்பர். அவர்களுக்கு உதவி செய்பவராக [எவரையும்] நீர் ஒருபோதும் காண மாட்டீர். [4:146]**

A. BASHEER AHMAD, *Melapalayam*

ஸிதாரே குலாம் பாரீ ஸைஃப் சாஹிப் தொகுதி 2 பக்கம் 26–27) இதுவே நம்பிக்கையாளரின் இறையச்சமாகும். பெயருக்காக ஆசைப்படவில்லை! புகழுக்கு ஆசைப்படவில்லை! அதிகாரம் மற்றும் பொறுப்புக்கு ஆசைப்படவில்லை! ஏதாவது நோக்கம் இருக்கும் என்றால் அது ஒன்றே ஒன்றுதான். அதாவது, இறை விருப்பம் கிடைக்க வேண்டும்; இறைவனுடைய ஆட்சி உலகில் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது. இம்மக்களே நமக்கு அழகிய முன்மாதிரிகள் ஆவர். ஒவ்வொரு பொறுப்பாளரும், ஒவ்வோர் அஹ்மதியும் இவ்விஷயங்களை தமக்கு முன்னால் வைக்க வேண்டும்.

பைத்துல் முகத்தஸ் வெற்றி கொள்ளப்பட்ட சம்பவம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதனுடன் ஹஸ்ரத் உபைதா அவர்களுக்கு தொடர்பிருந்தது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களின் தலைமையில் இஸ்லாமிய படை பாலஸ்தீனத்தை நோக்கி முன்னேறியது. அவர்கள் பாலஸ்தீனத்தின் நகரங்களை வெற்றி கொண்ட பின், பைத்துல் முகத்தஸை முற்றுகையிட்ட நேரத்தில் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களின் படையும் இவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டது. கோட்டைக்குள் அடைபட்டிருப்பதால் சலிப்படைந்து கிறிஸ்தவர்கள் சமாதானத்திற்கு அடியெடுத்து வைத்தார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் அவர்கள் தாமே வந்து சமாதான உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் என நிபந்தனை வைத்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் கிறிஸ்தவர்களின் இந்த விருப்பத்தை ஹஸ்ரத் உமர் அவர்கள் வரை சென்றடைய வைத்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்களுக்கு தகவல் அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் உமர் அவர்கள் தமக்கு பின்னால் ஹஸ்ரத் அலி அவர்களை அமீராக நியமித்து விட்டு ஹிஜ்ரி 16 ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதம் மதீனாவிலிருந்து புறப்பட்டு ஜாபியா என்ற இடத்தை அடைந்தார்கள். இது டமாஸ்கஸினுடைய சுற்றுப்புறத்திலுள்ள ஊர்களில் ஒன்றாகும். அங்கு தலைவர்கள் ஹஸ்ரத் அவர்களை வரவேற்றக் காத்திருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அம்மக்கள் வரவேற்றனர். எனது சகோதரர் எங்கே? என ஹஸ்ரம் உமர் அவர்கள் கேட்டார்கள். அமீருல் முஃமினீன் அவர்களே! நீங்கள் யாரை குறிப்பிடுகிறீர்கள் என மக்கள் கேட்டனர். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களை நான் குறிப்பிடுகிறேன் என்று பதிலளித்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் வந்து கொண்டிருப்பார்கள் என கூறப்பட்டது. அப்போது ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் ஒட்டகத்தின் மீது சவாரி செய்து வந்தடைந்தார்கள். சலாத்தை தெரிவித்து விட்டு நலம் விசாரித்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் மற்ற அனைத்து மக்களையும் சென்று விடுமாறு கூறி விட்டார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களுடன் அவருடைய தங்குமிடத்திற்குச் சென்றார்கள். வீட்டை அடைந்தவுடன் அங்கு ஒரு வாள், ஒரு கேடயம், ஒரு பாய் மற்றும் ஒரு குவளையைத் தவிர வேறு என்றும் இல்லாததைக் கண்டார்கள். அபூ உபைதாவே! சில பொருட்களையும் சேர்த்து வைத்திருக்க வேண்டாமா? வீட்டில் சில பொருட்களும் வைத்திருக்க வேண்டும் என ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள், அமீருல் முஃமினீன் அவர்களே! இவை சொகுசின் பக்கம் நம்மை ஈர்த்து விடும். நான் பொருட்களுக்கான ஏற்பாட்டை செய்து கொள்ள முடியும்தான். ஆனால் பிறகு சொகுசு மற்றும் வசதி வாய்ப்புகளைக் கண்டு அவற்றிலேயே வீழ்ந்து விடுவேன். ஆகவே இவ்வாறான பொருட்களை வைத்திருக்க நான் விரும்பவில்லை என்றார்கள்.

அந்நேரத்தில் உள்ளத்தை ஈர்க்கக்கூடிய ஒரு சம்பவமும் நடைபெற்றது. அச்சம்பவம் முன்பும் கூறப்பட்டு விட்டது. அது ஹஸ்ரத் பிலால் அவர்கள் பாங்கு கூறும் சம்பவமாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் பிலால் அவர்கள் பாங்கு கொடுக்காமல் இருந்தார்கள். அப்போது தொழுகைக்கான நேரம் வந்தது. பிலாலிடம் பாங்கு கூறுமாறு கட்டளையிட வேண்டும் என மக்கள் ஹஸ்ரத் உமர் அவர்களிடம் வலியுறுத்தினார்கள். ஹஸ்ரத் உமர் அவர்களின் கட்டளைக்கேற்ப ஹஸ்ரத் பிலால் அவர்கள் பாங்கு கொடுத்தபோது எல்லாருடைய கண்களும் கண்ணீர் வடித்தன. மக்களுடைய கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. எல்லாரையும் விட ஹஸ்ரத் உமர் அவர்கள் அதிகமாக அழுதார்கள். ஏனென்றால் அந்த பாங்கு இறைத்தூதர் (ஸல்) அவர்களின் காலத்தை அன்னாருக்கு நினைவுபடுத்தி விட்டது.

(ரோஷன் ஸிதாரே – குலாம் பாரீ ஸைஃப் சாஹிப் தொகுதி 2 பக்கம் 28–30.
முஃஜமுல் புல்தான் தொகுதி 5 பக்கம் 106 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத்)

ரோமானியர்கள் செய்த கடைசி முயற்சி தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டு முஸ்லிம்களிடமிருந்து சிரியாவை மீட்டெடுக்க ரோமானியர்கள் கடைசியாக ஒருமுறை முயற்சி செய்தார்கள். வட சிரியாவான அல்ஜஸீரா, வட ஈராக் மற்றும் ஆர்மீனியாவைச் சுற்றியுள்ள காட்டுவாசிகளும், கிறிஸ்தவர்களும், ஈரானியர்களும் முஸ்லிம்களுக்கு எதிராக தமக்கு உதவி புரியுமாறு ஹெர்குலிஸிடம் முறையீடு செய்தார்கள். அவர்கள் தம் சார்பாக 30 ஆயிரம் பேர் கொண்ட படையைக் கொண்டு வர விருப்பம் தெரிவித்திருந்தார்கள். அக்காலத்தில் அல்ஜஸீராவின் பெரும் பகுதியை ஹஸ்ரத் ஸஅது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் வெற்றி கொண்டிருந்தார்கள். ஆனால் அங்குள்ள காட்டுவாசிகளின் மீது அப்பொழுது வரை அவர்களால் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. மேலும் ரோமப் பேரரசின் கடற்படை இன்னும் உறுதியாக இருந்தது. அதை தகுந்த சந்தர்ப்பமாகக் கருதி அவன் ஒரு பெரும் கடற்படையுடன் தாக்குதல் தொடுத்து விட்டான்; அதே நேரத்தில் காட்டுவாசிகளின் ஒரு பெரும் படை ஹிமஸை முற்றுகையிட்டு விட்டார்கள். மேலும் வட சிரியாவின் சில நகரங்கள் கிளர்ச்சி செய்து விட்டன.

ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் உதவிப் படை அனுப்பும்படி ஹஸ்ரத் உமர் அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள், ஹஸ்ரத் ஸஅது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களிடம், உடனடியாக கூஃபாவிலிருந்து உதவிப்படை அனுப்பும்படி கட்டளை இட்டார்கள். ஹஸ்ரத் ஸஅது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் கஅபா பின் அம்ர் அவர்களின் தலைமையில் ஒரு படையை அனுப்பி வைத்தார்கள். அப்படியிருந்தும் கூட ரோமானியப் படை எண்ணிக்கைக்கும் முஸ்லிம் படை எண்ணிக்கைக்கும் இடையில் மிகப் பெரும் வித்தியாசம் இருந்தது. ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் படை வீரர்களுக்கு மத்தியில் உணர்ச்சிப் பொங்க ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். முஸ்லிம்களே! இன்று எவர் உறுதியாக நின்று, உயிர் பிழைத்துக் கொள்வாரோ அவருக்கும் நாடும், செல்வமும் கிடைக்கும். அவர் கொல்லப்பட்டு விட்டால் ஷஹாதத் – உயிர்த் தியாகம் எனும் செல்வம் கிடைக்கும். ''எவர் முஷ்ரிக் அல்லாத நிலையில் மரணிப்பாரோ அவர் நிச்சயமாக சொர்க்கம் புகுவார்'' என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக நான் சாட்சி கூறுகிறேன் என்று சொற்பொழிவாற்றினார்கள்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை ஏமாற்ற நினைக்கின்றனர். ஆனால், அவன் அவர்களுடைய ஏமாற்றுதலுக்கு தண்டனை அளிப்பான். அவர்கள் தொழுகைக்காக நிற்கும்போது சோம்பி நிற்கின்றனர். அவர்கள் மக்களுக்குக் காட்டு(வதற்காக தொழு)கின்றனர். மேலும், அல்லாஹ்வைக் குறைவாகவே நினைவு கூருகின்றனர். (4:143)

A. NASIR AHMAD, *Ameer, Melapalayam*

இரண்டு படைகளுக்கும் இடையில் போர் மூண்டது. கொஞ்ச நேரத்திலேயே முஸ்லிம்களுக்கு எதிராக ரோமானியர்களின் பாதங்கள் தடுமாற ஆரம்பித்து விட்டன. சிரியாவின் எல்லைப் புறமான மர்ஜுத் தீபாஜ் எனுமிடத்தில் மஸீஸா எனும் நகரம் உள்ளது. அங்கிருந்து பத்து மைல் தொலைவில் வாதி எனும் மலையொன்று உள்ளது. அந்த இடம் வரை அவர்கள் பின்வாங்கி ஓடி விட்டார்கள். அதன் பிறகு சீசருக்கு சிரியாவை நோக்கி முன்னேற ஒருபோதும் துணிவு வரவில்லை.

(அஷ்ரஹ் முபஷ்ஷிரஹ் – பஷீர் ஸாஜித் பக்கம் 816–817. அல் பத்ர் பப்ளிகேஷன் உருது பாஸார் லாஹூர் 200 ஆம் ஆண்டு. சீருஸ் ஸஹாபா – ஷாஹ் முயீனுத்தீன் நத்வீ தொகுதி 2 பக்கம் 131. தாருல் இஷாஅத் உருது பாஸார் கராச்சி பாகிஸ்தான். முஃஜமுல் புல்தான் தொகுதி 5 பக்கம் 118 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத்)

இதன் பிறகு அம்வாஸ் பிளேக் நோய் பற்றிய சம்பவம் வருகிறது. இந்த இடம் ரம்லாவிலிருந்து பைத்துல் முகத்தஸுக்குச் செல்லும் வழியில் ஆறு மைல் தொலைவிலுள்ள ஒரு பள்ளத்தாக்கின் பெயர் ஆகும். வரலாற்று நூலில் இது குறித்து எழுதப்பட்டுள்ளது. இது அம்வாஸ் பிளேக் என்று ஏன் அழைக்கப்படுகின்றதென்றால், இங்கிருந்துதான் இந்நோய் பரவ ஆரம்பித்தது. இந்த நோயினால் சிரியாவில் எண்ணற்ற மரணங்கள் நிகழ்ந்தன. சிலரைப் பொருத்த வரை ஆயிரம் பேர் வரை மரணமடைந்தார்கள் என்று கூறப்படுகிறது. இதன் முழு விபரம் புகாரியில் ஓர் அறிவிப்பில் காணக் கிடைக்கிறது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உமர் அவர்கள் சர்ஃக் என்ற இடத்தை அடைந்தார்கள். சர்ஃக் என்பது சிரியா மற்றும் ஹிஜாஸின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள தபூக் என்னும் பள்ளத்தாக்கில் உள்ள ஓர் ஊராகும். மதீனாவிலிருந்து 13 நாட்கள் பயணத் தொலைவில் அந்த ஊர் உள்ளது.

பழைய வரலாற்றில் இவ்வாறுதான் எழுதப்பட்டுள்ளது. அதன் பொருள் என்னவென்றால், ஏறக்குறைய ஆயிரம் மைல் பயண தூரமாக இருக்கலாம். அங்கு சென்றடைந்தபோது படைத்தளபதி ஹஸ்ரத் அபூ உபைதா மற்றும் அவருடைய தோழர்களை ஹஸ்ரத் உமர் அவர்கள் சந்தித்தார்கள். சிரியாவில் பிளேக் நோய் பரவிக் கொண்டிருப்பதை அவர்கள் எடுத்துக் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் ஆலோசனை செய்வதற்காக ஆரம்பகால முஹாஜிர்களை தம்மிடம் அழைத்தார்கள். அவர்களிடம் ஆலோசனை செய்த போது, முஹாஜிர்களுக்கு இடையில் கருத்து வேறுபாடு தோன்றியது. இங்கிருந்து நாம் பின்வாங்கக் கூடாது என சிலர் கூறினர். சிலரோ, இந்தப் படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களும் உள்ளனர். அவர்களை இந்தத் தொற்று நோயில் விட்டுச் செல்வது உகந்ததல்ல என்று கூறினர். ஹஸ்ரத் உமர் அவர்கள் தாம் அழைத்த முஹாஜிர்களை திருப்பி அனுப்பி விட்டார்கள். அதன் பிறகு அன்ஸாரை அழைத்தார்கள். அவர்களிடம் ஆலோசனை கேட்டார்கள். ஆனால் அன்ஸாரும் முஹாஜிர்களைப் போன்று கருத்து வேறுபாடு கொண்டனர். ஹஸ்ரத் உமர் அவர்கள் அன்ஸாரை அழைத்த பின்னர், மக்கா வெற்றியின்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு மதீனா வந்தடைந்த குறைஷியர்களின் வயோதிகர்களை அழைத்தார்கள். அவர்கள் அனைவரும் ஒருமித்து ஒரே ஆலோசனையைக் கூறினார்கள். அது என்னவென்றால், மக்களை உங்களுடன் அழைத்துக் கொண்டு திரும்பிச் சென்று விடுங்கள். தொற்று நோய் பரவியுள்ள இடத்தில் மக்களை அழைத்துச் செல்ல வேண்டாம் என்றனர். ஆகவே ஹஸ்ரத் உமர் அவர்கள் திரும்பிச் செல்லுமாறு அறிவிப்பு செய்தார்கள்.

ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள், அல்லாஹ்வின் நியதியில் இருந்து தப்பிப்பது சாத்தியமா? என்று ஹஸ்ரத் உமர் அவர்களிடம் கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள், ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களைப் பார்த்து, அபூ உபைதாவே! இதை உங்களைத் தவிர வேறு எவரேனும் கேட்டிருந்தால் நான் வியந்திருக்க மாட்டேன். ஆம்! நாம் அல்லாஹ்வின் நியதியிலிருந்து விலகிச் சென்று, அல்லாஹ்வின் இன்னொரு நியதியின் பக்கம் செல்கிறேன். ஒரு விதியிலிருந்து விலகிச் செல்கிறோம்; ஆனால் இன்னொரு விதியும் அல்லாஹ்வின் விதியே ஆகும். அதை நோக்கிச் செல்கிறோம். உம்மிடத்தில் ஓர் ஒட்டகம் உள்ளது. இரண்டு கரையிலுள்ள ஒரு பள்ளத்தாக்கில் நீர் அதை ஓட்டிச் செல்கிறீர்கள். ஒருபுறம் பசுமையாக உள்ளது. இன்னொரு புறம் வறண்டு உள்ளது. நீங்கள் உமது ஒட்டகத்தை பசுமையான இடத்தில் மேய விடுவதும் அல்லாஹ்வின் நியதி இல்லையா என்ன? அல்லது வறண்ட பகுதியில் மேய்க்க விடுவதும் அல்லாஹ்வின் நியதி இல்லையா என்ன? என்று கேட்டார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அப்போது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களும், தனது ஒரு பணியின் காரணமாக வெளியே சென்றிருந்த ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களும் வந்தடைந்தார்கள். இந்த விவகாரத்தைப் பற்றிய ஞானம் என்னிடம் உள்ளது என்றார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் கூறுகின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன். ஓரிடத்தில் தொற்று நோய் பரவியிருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டால், அங்கே நீங்கள் செல்ல வேண்டாம். மேலும் நீங்கள் இருக்கும் இடத்தில் நோய் பரவினால், நீங்கள் இருக்கும் இடத்தை விட்டு வெருண்டோடி வெளியே செல்ல வேண்டாம் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் என்றார்கள். இதைக் கேட்டதும் ஹஸ்ரத் உமர் அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி கூறி திரும்பி விட்டார்கள்.

(சஹீஹ் புகாரி கிதாபுல் திப் பாபு யுஸ்கரு ஃபித் தாவூன் ஹதீஸ் எண். 5729. முஃஜமுல் புல்தான் தொகுதி 4 பக்கம் 177–178. தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத். முஃஜமுதல் புல்தான் தொகுதி 3 பக்கம் 239 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத்)

அம்வாஸ் பிளேக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

“ஹஸ்ரத் உமர் அவர்கள் சிரியா சென்றபோது அங்கு பிளேக் பரவிக் கொண்டிருந்தது. இது அம்வாஸ் நோய் எனும் பெயரால் பிரபல்யமானதாக உள்ளது. ஹஸ்ரத் அபூ உபைதா மற்றும் இஸ்லாமியப் படை ஹஸ்ரத் உமர் அவர்களை வரவேற்றார்கள். தற்போது இப்பிரதேசத்தில் பிளேக் தொற்று நோய் பரவிக் கொண்டிருக்கிறது. ஆகவே தாங்கள் திரும்பிச் சென்று விட வேண்டும் என சஹாபாக்கள் ஆலோசனை வழங்கினார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் அம்மக்களின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டு திரும்பிச் செல்ல தீர்மானம் கொண்டார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களுக்கு இந்த தீர்மானம் குறித்து தெரிய வந்த போது, أَتَفِرُّ مِنَ الْقَضَاء நீங்கள் இறை நியதியை விட்டு வெருண்டோடிச் செல்கிறீர்களா? எனக் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் உமர் அவர்கள், أَفِرُّ مِنْ قَضَاءِ اللّٰهِ إِلَى قَدْرِ اللّٰه நான் அல்லாஹ்வின் நியதிலிருந்து அவனுடைய இன்னொரு விதியின் பக்கம் செல்கிறேன் என்று கூறினார்கள். அதாவது அல்லாஹ்வுடைய ஒரு சிறப்பான தீர்ப்பு உண்டு. அவனுடைய பொதுவான தீர்ப்பும் ஒன்று உண்டு. இந்த இரண்டு

**திருக்குர்ஆனிலிருந்து...**

நீங்கள் நன்றி செலுத்தி நம்பிக்கையும்
கொள்வீர்களாயின் உங்களைத் தண்டிப்பதில்
அல்லாஹ்விற்கு என்ன கிடைக்கப் போகிறது?
அல்லாஹ் மதிக்கக் கூடியவனும் நன்கு
அறிபவனுமாவான். (4:148)

A. SAMSUL ALAM
*Qaid, Majlis Khuddamul Ahmadiyya, Melapalayam*

தீர்ப்புகளும் அவனுடையதே ஆகும்; வேறு ஒருவருடையது அல்ல. ஆகவே அவனுடைய தீர்ப்பிலிருந்து ஓடவில்லை. மாறாக அவனுடைய ஒரு தீர்ப்பிலிருந்து அவனுடைய இன்னொரு தீர்ப்பின் பக்கம் செல்கிறேன் என்றார்கள்.''

வரலாற்றில் இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் உமர் அவர்களுக்கு பிளேக் பரவும் செய்தி கிடைத்தபோது, ஆலோசனைக்காக மக்களை ஒன்று கூட்டினார்கள். சிரியாவில் முன்பும் கூட பிளேக் பரவியது. இவ்வாறான காலத்தில் மக்கள் என்ன செய்வார்கள்? என்று ஆலோசனை கேட்டார்கள். பிளேக் பரவும்போது மக்கள் இங்கும் அங்கும் சென்று விடுவார்கள். இதனால் பிளேக்கின்ற ஆக்ரோஷம் குறைந்து விடும் என்று அவர்கள் கூறினார்கள். அதாவது, நகரத்தில் வசிக்காமல் சுற்றுப்புறத்திலுள்ள திறந்த வெளிக்குச் சென்று விடுவார்கள். இந்த ஆலோசனையின் பக்கம் சுட்டிக் காட்டியவாறு, இறைவன் ஒரு பொதுவான சட்டத்தையும் வைத்துள்ளான். எவர் ஒருவர் பிளேக் பரவியுள்ள இடத்திலிருந்து திறந்த வெளியில் இங்குமங்கும் சென்று விடுவாரோ அவர் பிழைத்துக் கொள்வார் என்று கூறினார்கள். ஆக இந்தச் சட்டத்தையும் இறைவனே உருவாக்கி இருக்கும்போது, நான் அவனுடைய எந்தவொரு சட்டத்தையும் மீறவில்லை. மாறாக, அவனுடைய நியதியிலிருந்து விதியை நோக்கி திரும்புகிறேன் என்றார்கள். அதாவது இறைவனுடைய சிறப்பான சட்டத்திற்கு எதிராக அவனுடைய பொதுவான சட்டத்தை நோக்கிச் செல்கிறேன். ஆகவே நான் வெருண்டோடுகிறேன் என்று நீங்கள் கூற முடியாது. நான் அவனுடைய ஒரு சட்டத்திலிருந்து அவனுடைய இன்னொரு சட்டத்தின் பக்கம் செல்கிறேன் என்றார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 5 பக்கம் 170–171)

ஹஸ்ரத் உமர் அவர்கள் மதீனா திரும்பி வந்தார்கள். ஆனால் பிளேக் பரவியதன் காரணமாக அன்னாருக்கு பெரும் அச்சமும், கவலையும் இருந்தது. ஒரு நாள் ஹஸ்ரத் உமர் அவர்கள், அபூ உபைதா அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். உங்களுடன் எனக்கு ஒரு முக்கிய பணி உள்ளது. ஆகவே இக்கடிதம் கிடைத்தவுடன் உடனடியாக மதீனாவை நோக்கி கிளம்பி விடுங்கள். இக்கடிதம் இரவில் கிடைக்கப் பெற்றால், காலை விடியட்டும் என காத்திருக்க வேண்டாம்; இக்கடிதம் காலையில் கிடைக்கப் பெற்றால் இரவு வரட்டும் என காத்திருக்க வேண்டாம் என்று எழுதினார்கள். அபூ உபைதா அவர்கள் அக்கடிதத்தைப் படித்தபோது, அமீருல் முஃமினீன் அவர்களின் தேவையை நான் அறிவேன். அல்லாஹ் ஹஸ்ரத் உமர் அவர்களின் மீது கருணை புரிவானாக. எவர் எஞ்சியிருக்க மாட்டாரோ அவரை எஞ்சியிருக்க வைக்க நாடுகிறார் என்று கூறினார்கள். எதன் காரணமாக அச்சம் தோன்றியுள்ளது என்பதை புரிந்து கொண்டார்கள். பிறகு அக்கடிதத்திற்கு பதில் எழுதினார்கள். அமீருல் முஃமினீன் அவர்களே! நான் உங்களுடைய நோக்கத்தை அறிந்து கொண்டேன். என்னை அழைக்க வேண்டாம்; இங்கேயே இருக்க விடுங்கள். நான் முஸ்லிம் படை வீரர்களுள் ஒருவனாவேன். எது விதிக்கப்பட்டுள்ளதோ அது நிகழ்ந்தே தீரும். அதை விட்டு நான் எவ்வாறு முகம் திருப்பிக் கொள்ள இயலும்?

**திருக்குர்ஆனிலிருந்து...**

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களை விட்டு விட்டு, நிராகரிப்பாளர்களை (உங்களுடைய) நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் உங்களுக்கு எதிராக மிகத் தெளிவான குற்றச்சாட்டி(னைச் சுமத்துவத)ற்குரிய வாய்ப்பை இறைவனுக்குக் கொடுக்க விரும்புகின்றீர்களா? (4:145)

M. SABAHUL ISLAM & A. MOHAIDEEN ALI
Melapalayam

என்று எழுதினார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் அக்கடிதத்தைப் படித்த போது அழுதார்கள். அப்போது முஹாஜிர்களுக்கிடையே அமர்ந்திருந்தார்கள். அமீருல் முஃமினீன் அவர்களே! அபூ உபைதா மரணமடைந்து விட்டாரா என்ன? என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் அவர்கள், இல்லை; ஆனால் மரணமடைந்து விடுவார்கள் என பதிலளித்தார்கள்.

(ஸீரு அஃலாமுன் நுப்லா தொகுதி 1 பக்கம் 18–19 அபூ உபைதா பின் அல் ஜர்ராஹ். முஅஸ்ஸிஸதுர் ரிஸலாத்து பைரூத் லெபனான் 1996)

பிறகு ஹஸ்ரத் உமர் அவர்கள் அபூ உபைதா அவர்களுக்கு கடிதம் எழுதி, முஸ்லிம்களை அந்த இடத்திலிருந்து வெளியேற்றி சுகாதாரமான வேறு இடத்திற்கு கொண்டு செல்லுமாறு கூறினார்கள். எப்பொழுதெல்லாம் ஒரு முஸ்லிம் படைவீரர்கள் பிளேக்கால் மரணிப்பாரோ அப்போதெல்லாம் ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் அழுவார்கள். மேலும் அல்லாஹ்விடம் ஷஹாதத்தை வேண்டுவார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அப்போது ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள், அல்லாஹ்வே! அபூ உபைதாவின் குடும்பத்திற்கு இந்த ஷஹாதத்தில் பங்கு இல்லையா? என்று துஆ செய்து வந்தார்கள். ஒருநாள் அபூ உபைதா அவர்களின் விரலில் ஒரு சிறிய கட்டி தோன்றியது. அதைக் கண்ட அவர்கள், அல்லாஹ் இச்சிறியதில் பரக்கத் செய்வான் என்று கூறினார்கள். அந்த சிறியதில் பரக்கத் ஏற்பட்டால் அது பெருகி விடுகின்றது.

உர்பா ஸஹபன் சாரிய்யா அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் பிளேக்கால் நோய்வாய்ப்பட்டபோது, நான் அவர்களை சந்திக்கச் சென்றேன். ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் என்னிடம், ''எவர் பிளேக்கால் மரணிப்பாரோ அவர் ஷஹீதாவார்; எவர் வயிற்று நோயினால் மரணிப்பாரோ அவர் ஷஹீதாவார்; எவர் நீரில் மூழ்கி இறப்பாரோ அவர் ஷஹீதாவார்; எவர் கூரை விழுந்து அமுங்கி இறப்பாரோ அவர் ஷஹீதாவார்'' என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என்றார்கள்.

ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களுக்கு இறுதி நேரம் நெருங்கிய போது மக்களைப் பார்த்து, மக்களே! நான் உங்களுக்கு சில அறிவுரைகளை விட்டுச் செல்கிறேன். அதனை ஏற்றுக் கொண்டால் பயனடைவீர்கள். அந்த அறிவுரை என்னவென்றால், ''தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத் கொடுங்கள். ரமலான் நோன்பை நோற்க வேண்டும். தான தருமங்கள் செய்யுங்கள். ஹஜ் செய்யுங்கள். உம்ரா செய்யுங்கள். உங்களுக்குள் நன்மையை ஏவிக் கொள்ளுங்கள். உங்களது ஆட்சியாளர்களின் நலன் நாடுங்கள். அவர்களை ஏமாற்றாதீர்கள். உங்களது கடமையிலிருந்து கவமற்றவர்களாக பெண்கள் உங்களை ஆக்கிவிட வேண்டாம். மனிதன் ஆயிரம் வருடங்கள் உயிரோடு இருந்தாலும், எவ்வாறு நான் பிரிய விரும்புகிறேனோ அவ்வாறு ஒரு நாள் அவன் இவ்வுலகை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டும். அல்லாஹ் ஆதமின் சந்ததிகளுக்கு மரணத்தை விதித்துள்ளான். ஒவ்வொருவரும் மரணிப்பார். மரணத்திற்காக ஆயத்தமாக இருப்பவரும், அந்த நாளுக்காக ஆயத்தமாக இருப்பவரும் புத்திசாலியாவார். அமீருல் முஃமினீன் அவர்களுக்கு எனது சலாத்தை எட்ட வையுங்கள். நான் அனைத்து அமானிதங்களையும் செலுத்தி விட்டேன் எனக் கூறி விடுங்கள்'' என்றார்கள்.

பிறகு ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள், எனது தீர்மானத்திற்கு ஏற்ப என்னை இங்கேயே அடக்கம் செய்து விடுங்கள் என்றார்கள். ஆகவே உர்தன் எனும் பிரதேசத்தில் பைஸான் எனும் பள்ளத்தாக்கில் அன்னாருடைய கபர் உள்ளது. சில அறிவிப்புகளின்படி, ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் ஜாபியாவிலிருந்து பைத்துல்

முகத்தஸுக்கு தொழச் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது செல்லும் வழியிலேயே அன்னாரது மரண நேரம் வந்து விட்டது எனக் கூறப்படுகிறது.மேலும் இன்னோர் அறிவிப்பின் அடிப்படையில், அன்னாரது மரணம் சிரியாவின் ஒரு பிரதேசமான ஃபிஹல் என்னும் இடத்தில் நிகழ்ந்ததாகவும், அன்னாருடைய கபர் பைஸான் என்னும் இடத்திற்கு அருகில் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் அபூ உபைதா அவர்கள் இறுதி நோயின்போது ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் அவர்களை தனது பிரதிநிதியாக நியமித்தார்கள். அபூ உபைதா அவர்கள் மரணமடைந்தபோது ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் அவர்கள் மக்களைப் பார்த்து, மக்களே! இன்று நம்மை விட்டு எவ்வாறான மனிதர் பிரிந்து சென்றுள்ளார் என்றால், அவரை விட தூய உள்ளம் கொண்டவரை, அப்பழுக்கற்ற ஒருவரை, மக்களை நேசிக்கக் கூடியவரை, மக்களின் நலம் விரும்பியை நான் கண்டதில்லை. அல்லாஹ் அவர் மீது கருணைகளைப் பொழிய துஆ செய்யுங்கள் என்றார்கள்.

(ரோஷன் ஸிதாரே – குலாம் பாரீ ஸைஃப் சாஹிப் தொகுதி 2 பக்கம் 31–33. ஸீரு அஃலாமுன் நுப்லா தொகுதி 1 பக்கம் 22,23. அபூ உபைதா பின் அல் ஜர்ராஹ். முஅஸ்ஸிஸதுர் ரிஸாலது பைரூத் லெபனான் 1996)

ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் அவர்கள் ஹிஜ்ரி 18 ஆம் ஆண்டில் மரணமடைந்தார்கள். அப்போது அவருடைய வயது 58 ஆகும். (இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 343. தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 2010 வெளியீடு) ஒருமுறை ஹஸ்ரத் உமர் அவர்கள், ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களுக்கு 4000 திர்ஹம்களும், 400 தீனார்களும் அனுப்பி வைத்தார்கள். இந்த செல்வத்தை அவர் என்ன செய்கிறார்? என்று கண்காணிக்குமாறு ஹஸ்ரத் உமர் தனது தூதுவரிடம் கூறினார்கள். அந்தத் தூதுவர் செல்வத்தை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் அபூ உபைதா அவர்களிடம் சென்றார். அபூ உபைதா அவர்கள் முழு செல்வத்தையும் மக்களிடத்தில் பங்கிட்டுக் கொடுத்து விட்டார்கள். இந்த முழு சம்பவத்தையும் ஹஸ்ரத் உமரிடம் அவர் எடுத்துக் கூறினார். அதைக் கேட்டதும் ஹஸ்ரத் உமர் அவர்கள், அல்லாஹ்வுக்கு நன்றி! அவன் இஸ்லாத்தில் அபூ உபைதா போன்றோரை தோன்றச் செய்துள்ளான் என்றார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் உமர் அவர்கள் தம் தோழர்களிடம் எதையாவது வேண்டுங்கள் என்றார்கள். ஒருவர், எனது விருப்பம் என்னவென்றால் இந்த வீடு தங்கத்தால் நிரம்பி விட வேண்டும். அதை நான் அல்லாஹ்வின் வழியில் செலவழிக்க வேண்டும்; தான தருமங்கள் செய்ய வேண்டும் என்றார். இன்னொருவர், எனது விருப்பம் என்னவென்றால் இந்த வீடு வைரம் மற்றும் மணிக்கற்களால் நிரம்பி விட வேண்டும். அதை நான் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்ய வேண்டும். தான தருமங்கள் செய்ய வேண்டும் என்றார். இன்னும் ஏதாவது வேண்டுங்கள் என உமர் அவர்கள் கூறினார்கள். அப்போது அவர்கள், அமீருல் முஃமினீன் அவர்களே! நாங்கள் என்ன விருப்பம் கொள்ள வேண்டும் என எங்களுக்கு புரியவில்லை என்றார்கள்.

ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறினார்கள்: என்னுடைய விருப்பம் என்னவென்றால், இந்த வீடு ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ், ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல், ஹஸ்ரத் சாலிம் மவ்லா அபூஹுரைரா மற்றும் ஹஸ்ரத் ஹுஸைஃபா பின் யமான் போன்ற மக்களால் நிரம்பி இருக்க வேண்டும் என்றார்கள். அதாவது இவ்வாறான மக்கள் இருக்க வேண்டும் என்றார்கள்.

(அல் முஸ்தத்ரக் அலஸ் ஸஹீஹைன் தொகுதி 3 பக்கம் 252 ஹதீஸ் 5005. கிதாப் மஃரிஃபது ஸஹாபா ஸிக்ரு மனாகிப் ஸாலிம் மவ்லா அபீ ஹுஸைஃப் தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 2002)

இம்மக்கள் எத்துணை நற்பேறு பெற்றவர்கள்! இவர்கள் இவ்வுலகிலும் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறக்கூடியவர்களாக இருந்தார்கள்; மறுமையிலும் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இவர்களைப் பற்றிய நற்குறிப்பு (இத்துடன்) இன்று முடிவடைகிறது.

சில ஜனாஸாக்களை தொழ வைப்பேன். அவர்களைப் பற்றிய நற்குறிப்பு உள்ளது. அவர்களில் ஒருவர் ஷஹீது ஆவார். முந்தைய நாட்களில் இவர் ஷஹீதாக்கப்பட்டார். அவர் பெஷாவரைச் சார்ந்த ஃபஸ்ல் தீன் சாஹிபுடைய மகனாகிய பேராசிரியர், ***டாக்டர் நயீமுத்தீன் கட்டக் சாஹிப்*** ஆவார்கள். அக்டோபர் 5 ஆம் தேதி மதியம் ஒன்றரை மணிக்கு எதிரிகளால் சுடப்பட்டு ஷஹீதாக்கப் –பட்டுள்ளார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

சுப்பீரியல் சயின்ஸ் கல்லூரியில் பேராசிரியராக உள்ளார். மதியம் ஒன்றரை மணிக்கு கல்லூரியிலிருந்து தமது வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார். மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவர் இவரை சுட்டனர். சம்பவ இடத்திலேயே ஷஹீதாக்கி விட்டனர். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

ஷஹீதின் வயது 56 ஆகும். கல்வித் துறையுடன் 25 வருடங்களாக தொடர்புடையவர். காயிதே அஃஸம் யுனிவர்சிட்டியில் இவர் எம்.ஃபில் படித்துள்ளார். அதன் பிறகு ஸ்காலர்ஷிப்பில் சீனா சென்றார். அங்கு மைக்ரோ என்வைர்மெண்ட் பயாலஜியில் பி.ஹெச்.டி படித்தார். அதன் பிறகு இஸ்லாமிய காலேஜ் யுனிவர்சிட்டியில் தொண்டாற்றினார். பெஷாவர் யுனிவர்சிட்டியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். பி.ஹெச்.டி பேனலில் மாணவர்களுக்கு நேர்காணல் எடுக்கும் பணியில் ஓர் உறுப்பினராக இருந்தார். பாகிஸ்தானிலுள்ள பல்வேறு கல்வி நிறுவனங்கள் சொற்பொழிவாற்ற இவரை அழைப்பார்கள். இவர் கல்வித் துறையுடனேயே அதிக தொடர்புடையவராக இருந்தார்.

இவருடைய குடும்பத்தில் இவருடைய தந்தை வழிப் பாட்டனார் ருக்னுத்தீன் சாஹிப் கட்டக் அவர்களின் மூலமாக அஹ்மதிய்யத் கிடைக்கப் பெற்றது. இவர் கர்க் மாவட்டத்தைச் சார்ந்தவர் ஆவார். மர்ஹூமுடைய பாட்டி பீபீ நூர் நாமா சாஹிபாவும் அஹ்மதியானார். இவருடைய தந்தையின் பெயர் ஷேர் ஸமான் ஆகும். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபியாவார். அதாவது பாட்டியினுடைய தந்தை.

காதியானை விட்டு இவர்கள் திரும்பிச் செல்லும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சார்பாக இவர்களுக்கு ஓர் அருளுக்குரிய குர்தா அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இவருடைய குடும்பத்தில் அது இன்றும் அருளுக்குரியதாக உள்ளது. ஷஹீதுடைய தந்தை ஃபஸ்ல் தீன் சாஹிப் அவர்கள் கால்நடைத் துறையில் கால்நடை மருத்துவராக இருந்தார். டெபுடி டைரக்டராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்கள். பிரபல்யமான கவிஞராகவும் இருந்தார்கள். தாயார் மஹபூபதுர் ரஹ்மான் சாஹிபா ஆவார். இவர் கல்வித் துறையில் டெபுடி டைரக்டராகப் பணியாற்றினார்கள். அங்கிருந்து தான் ஓய்வு பெற்றார்கள். பல வருடங்களாக மர்ஹூமுடைய குடும்பம் எதிர்ப்பைச் சந்தித்து வருகிறது. ஷஹீதுடைய மாமனார் பஷீர்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நன்மை செய்பவராகி
இப்ராஹீமின் நேரான மார்க்கத்தைப் பின்பற்றுகிறவரை விட
அழகான மார்க்கத்தையுடையவர் யார்? அல்லாஹ்
இப்ராஹீமைத் தன் நெருங்கிய நண்பராக
ஆக்கிக் கொண்டான். (4:126)

S.S.H. MUHAMMED LEBBAI, *Melapalayam*

அஹ்மது சாஹிப் அவர்கள் அட்வகேட் ஆவார்கள். பெஷாவரின் அசீனிபாயான் என்ற ஜமாஅத்தின் தலைவராக இருந்தார்கள். 2019 ஆம் ஆண்டு கடத்தப்பட்டார்கள். இன்று வரை என்ன ஆனார்கள்? எங்கு உள்ளார்கள்? என்று தெரியவில்லை. அவர் திரும்பக் கிடைக்கவில்லை.

ஷஹீது அவர்கள் வெளிப்படையான பல்வேறு சிறப்புகளுக்கு சொந்தக்காரர் ஆவார். நன்கு படித்தவராக இருந்தார். ஆனால் பாதுகாப்புப் பணி கொடுப்பதற்கு எப்போதும் ஆயத்தமாக இருப்பார். விருந்தோம்பல் இவருடைய மிகச் சிறந்த முன்மாதிரியாக இருந்தது. படைப்பினங்களின் மீது அனுதாபம் கொள்ளுதல், ஏழைகளுக்கு உதவுவதல், குடும்பத்தில் ஒவ்வோர் உறுப்பினருடனும் அனுதாபத்துடன் நடந்து கொள்ளுதல் போன்ற சிறப்புகளுடன் கல்வியின் பக்கம் சிறப்பான கவனமும் இருந்தது. அஹ்மதி குழந்தைகள் கல்வி பயிலுமாறு மீண்டும் மீண்டும் அறிவுறுத்தி வந்தார்கள். தமது குழந்தைகளுக்கும் உயர் கல்வி வழங்கி இருக்கிறார்கள்.

இவருடைய மனைவி சஅதியா புஷ்ரா சாஹிபா அவர்கள் கூறுகிறார்கள்: ஷஹீது அவர்கள் ஷஹாதத் சம்பவத்திற்கு இரண்டு வாரம் முன்பு ரப்வா வந்தார்கள். அங்கு பெஹஸ்தி மக்பராவுக்குச் சென்றபோது, நமக்கும் இங்கு இடம் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! என்று கூறினார்கள். அதன் பிறகு இங்கு இடம் கிடைக்க நமக்கு ஏது நற்பேறு! என்றார்கள்.

எவ்வாறிருப்பினும் அல்லாஹ் அவருடைய இந்த விருப்பத்தை எவ்வாறு பூர்த்தி செய்தான் என்றால், அவருடைய நல்லடக்கம் ரப்வாவில் நடந்தது.

ஷஹீதுடைய மைத்துனர் டாக்டர் முனீர் அஹ்மது கான் சாஹிப் ஆவார்கள். இவர் தற்போது தாஹிர் ஹார்ட் (இன்ஸ்டிடியூட்டி)ல் பணியாற்றுகிறார். அவர் கூறுகிறார்: ஷஹீது அவர்கள் இவரிடம் ஒரு எதிராளியான பேராசிரியர் ஒருவர் உள்ளார். அவர் ஷஹீதுடை புகைப்படம் மற்றும் அவருடைய பிள்ளைகளின் புகைப்படங்களை எதிரிகளுக்கு காட்டுகிறார். இவர்களை கொன்று விடுமாறு அவர்களை தூண்டுகிறார் என்று கூறினார். ஷஹீதுடைய வீட்டிற்கு வெளியிலும் எதிர்ப்புகளின் பேனர் வைக்கப்பட்டுள்ளது. மரணத்திற்கு ஒரு வாரம் முன்பு ஷமீது என்னைச் சந்திக்க வந்தார். எங்களுடன் சாப்பிடுங்கள் என நான் கூறினேன். இல்லை. இல்லை! நான் லங்கர்கானாவில் சாப்பிட்டுக் கொள்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் லங்கர்கானாவில் சாப்பிடக்கூடிய உணவின் அந்த இன்பமும் அங்கிருந்து கிடைக்கக்கூடிய அருளும் வேறு எங்கும் கிடைக்காது. வேறு சந்தர்ப்பத்தில் உங்களுடன் சாப்பிடுகிறேன் என்று கூறினார்.

ஷஹீது மர்ஹூம் அவர்கள் தமக்குப் பின்னால் தம்முடைய மனைவி சஅதியா நஸீம் சாஹிபா அவர்களைத் தவிர, மூன்று மகள்களையும் இரண்டு மகன்களையும் விட்டுச் சென்றுள்ளார். ஒரு மகளுக்கு திருமணமாகி விட்டது. மற்ற இரண்டு பெண்கள் படித்துக் கொண்டிருக்கின்றனர். ஒரு மகன் இன்ஜினியராக உள்ளார். இன்னொரு மகன் முதல் வருட மாணவராக உள்ளார். அவர்களின் பெயர்கள் கலீமுத்தீன் கட்டக் மற்றும் நூருத்தீன் கட்டக் ஆகும். கலீமுத்தீன் இன்ஜினியர் ஆவார். நூருத்தீன் முதலாமாண்டு மாணவர் ஆவார். ஷஹீதுடைய இன்னொரு மைத்துனர் நவீத் அஹ்மது சாஹிப் அவர்களும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுகிறார். பெஷாவர் ஜமாஅத்தின் அமீர் ஆவார். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்புடனும், கருணையுடனும் நடந்து கொள்வானாக. அவருடைய உறவினர்களுக்கும் பொறுமையை வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா முஹம்மது சாதிக் சாஹிபின் மகனும், ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனியின் மாணவருமான ***உஸாமா சாதிக் சாஹிப்*** அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் ஜெர்மனி உடைய ராயின் எனும் நதியில் மூழ்கி இறந்து போனார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

மரணமடையும்போது மர்ஹூமுடைய வயது 20 ஆகும். பாகிஸ்தானுடைய சக்சிகந்தர் குஜ்ராத்தைச் சார்ந்தவர். சகோதர சகோதரிகளுள் அனைவரையும் விட மிக இளையவர். பெற்றோரைத் தவிர இவர் தமக்குப் பின்னால் ஐந்து சகோதரிகளையும் ஒரு சகோதரரையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் காலக்கட்டத்தில் இவருடைய தந்தைவழிப் பாட்டனாரின் குடும்பத்தின் மூலமாக இவர்களுக்கு அஹ்மதிய்யத் கிடைத்தது. மர்ஹூமுடைய பாட்டனார் தம்முடைய இரண்டு சகோதரர்களுடன் அஹ்மதியானார். அதன் பிறகு மற்ற இரண்டு சகோதரர்களும் அஹ்மதிய்யத்தை விட்டு முகம் திருப்பி விட்டனர். ஆனால் மர்ஹூமுடைய பாட்டனார் அஹ்மதிய்யத்தில் உறுதியாக இருந்தார். தாய்வழிப் பாட்டனார் குடும்பத்தில் மர்ஹூமுடைய கொள்ளுத்தாத்தா ஹஸ்ரத் ஷாஹ் முஹம்மது சாஹிப் மற்றும் அவருடைய தந்தை ஹஸ்ரத் லங்கர் முஹம்மது சாஹிபின் மூலமாக அஹ்மதிய்யத் கிடைத்தது. இவ்விருவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபியாவார்கள். இவர்கள் 1903 ஆம் ஆண்டு ஜெஹ்லமில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கையில் பைஅத் செய்தார்கள்.

1989 ஆம் ஆண்டு சக்சிகந்தரில் ஜமாஅத்திற்கு எதிராக பல ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. மர்ஹூமுடைய பெற்றோருக்கும் பல எதிர்ப்புகளைச் சந்திக்க நேர்ந்துள்ளது. மர்ஹூமுடைய தாயாரும் தாக்கப்பட்டுள்ளார். தந்தையார் சாதிக் சாஹிபின் மீது பொய் வழக்கு தொடரப்பட்டது. அவ்வழக்கு ஏழு வருடங்கள் வரை நடைபெற்றது. இவர்கள் அதன் பிறகு ஜெர்மனிக்கு வந்து விட்டார்கள். ஆரம்பக் கல்வியை அங்குதான் கற்றிருந்தார். இங்கு வந்த பிறகு ஜாமிஆவில் சேர்ந்தார். ஜாமிஆவில் தற்போதுதான் மூன்றாம் ஆண்டை நிறைவு செய்திருந்தார்.

எவ்வாறிருப்பினும் இது அல்லாஹ்வின் நியதியாகும். அவரை தம்மிடத்தில் அழைத்துக் கொண்டான். மர்ஹூமுடைய தந்தை கூறுகிறார்: நான் மர்ஹூமை எவ்வளவு புகழ்ந்தாலும் அது குறைவே! ஏனென்றால் அவர் சிறிய வயதிலேயே பல வேலைகளைச் செய்துள்ளார். அவர் மாணவராக இருந்தாலும் மிகத் திறமையுள்ள பிள்ளையாக இருந்தார். அவருடைய பெரும்பாலான நேரம் படிப்பில் கழியும். கொரோனாவின் காரணமாக ஆறு மாதம் அவர் வீட்டில்தான் இருந்தார். ஜமாஅத்தான தொழுகையுடன் ரமலானுடைய நோன்புகள் அனைத்தையும அவர் நோற்றார். தராவீஹ் தொழுகையையும் ஜமாஅத்தாகத் தொழ வைப்பார். அவரே இமாமாக நின்று தொழ வைப்பார். விடுமுறைக்குப் பிறகு ஜாமிஆ செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். ஆனால் அல்லாஹ்வுக்குப் பிரியமானவராக ஆகி விட்டார்.

தாயார் கூறுகிறார்: மர்ஹூம் எண்ணற்ற சிறப்புகளுக்குச் சொந்தக்காரர் ஆவார். மிகப் பொறுப்புடன் ஒவ்வொரு வேலையையும் செய்வார். விரைவாக முடிக்க வேண்டும் எனவும் முயற்சி செய்வார். மிக எளிய இயல்புடையவர்; மிகக் குறைவாகப் பேசக்கூடியவர்; தேவையின்போது பேசக்கூடியவர்; பெற்றோருக்கு மிக அதிகமாகக் கட்டுப்படக்கூடியவர், உறுதியான எண்ணம் கொண்டவர், பக்குவமான இயல்புடையவர் மற்றும் தொலைநோக்குப் பார்வை உடையவராக இருந்தார். பல்வேறு மொழிகளில் புலமை பெற முயற்சி செய்து வந்தார். அதற்காக அரபு, பாரசீகம், ஆங்கிலம் மற்றும் ஜெர்மனி மொழிகளில் குறிப்பாக கவனம் செலுத்தி வந்தார்.

ஜெர்மனியின் நேஷனல் தப்லீக் செயலர் ஜனாப் ஃபரீது சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்: உஸாமா அவர்கள் பல சிறப்பம்சங்களுக்கு எஜமானராகத் திகழ்ந்தார்கள். ஆர்வத்துடன் தப்லீக் பணிகளில் பங்கெடுப்பதும் அவற்றில் ஒன்றாகும். தனது மரணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு கூட தொடர்ச்சியாக மூன்று நாட்கள் பிரசுரம் விநியோகிக்க கிழக்கு ஜெர்மனி சென்றிருந்தார். பிரசுரம் விநியோகிக்க எப்போது அழைத்தாலும் ஒருபோதும் மறுத்ததில்லை; முந்திக் கொண்டு பங்கெடுப்பார்.

ஜெர்மனி ஜாமிஆவில் தேர்ச்சி பெற்ற முரப்பி ஸுஹைப் நாஸிர் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: மர்ஹூம் என்னை விட நான்காண்டு ஜூனியராக இருந்தார். ஆனால் இறை வழிபாட்டில் எனக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். பள்ளிவாசலில் தொழுகைக்காக அவரை நான் பெரும்பாலும் முதல் வரிசையில்தான் கண்டுள்ளேன். பள்ளிவாசலுக்கு, முன்பே வந்து நஃபில் தொழுது கொண்டிருப்பார். தொழுகைக்குப் பிறகு பெரும்பாலும் இறை தியானத்தில் மூழ்கி இருப்பார். எல்லாரையும் விட முதலில் பள்ளிவாயிலுக்கு வந்து, இறுதியாக பள்ளிவாசலை விட்டு செல்லக்கூடிய மாணவர்களுள் ஒருவராக இருந்தார். ஜுமுஆ தொழுகையிலும் முதல் வரிசையில் அமர்ந்திருப்பார். ஜாமிஆவின் படிப்பில் பக்குவமானவராகத் தென்பட்டார்.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அவருடைய அந்தஸ்தை உயர்த்துவானாக. அவருடைய பெற்றோர், சகோதர சகோதரிகளுக்கு பொறுமையை வழங்குவானாக.

அடுத்த ஜனாஸா ***ஸலீம் அஹ்மது மலிக் சாஹிப்*** உடையதாகும். அவர் இங்கு அரசாங்க மட்டத்திலும், கல்வித்துறை மட்டத்திலும் கல்வியுடன் தொடர்புடையவராக இருந்தார். ஓய்வு பெற்ற பின்னர் ஜாமிஆ ஆரம்பித்தவுடன் அதில் ஆசிரியராகவும் இருந்தார். செப்டம்பர் 24 ஆம் தேதி தமது 87 –வது வயதில் மரணமடைந்தார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவருடைய பாட்டனார் ஹஸ்ரத் மலிக் நூருத்தீன் சாஹிப் அவர்களும், தந்தை ஹஸ்ரத் மலிக் அஸீஸ் அஹ்மது சாஹிப் அவர்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் சஹாபாக்களாக இருந்தார்கள். இவருடைய தந்தை பற்றிய ஒரு சம்பவத்தை தாயார் எடுத்துள்ளார்கள். அது என்னவென்றால், ஒருமுறை ஒரு நோயின் காரணமாக மலிக் சாஹிபின் தந்தைவழி குடும்பத்தில் பலர் இறந்துள்ளனர். அப்போது மலிக் சாஹிபின் தாயார், அதாவது மர்ஹூமுடைய பாட்டி அவர்கள் ஹக்கீம் நூருத்தீன் சாஹிபிடம் குழந்தையின் நிலை பற்றி கூறியுள்ளார்கள். உடனே மவ்லவி சாஹிப் அவர்கள் குழந்தையைப் பார்ப்பதற்காக அவருடைய வீட்டிற்குச் சென்றுள்ளார்கள். குழந்தை உயிர் பிழைப்பதற்கு மிகக் குறைவான சாத்தியங்களே உள்ளன. துஆ மட்டுமே காப்பாற்ற முடியும் என்று கூறியிருக்கிறார்கள்.

அதன் பிறகு ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் சென்று துஆவுக்காக விண்ணப்பித்திருக்கிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை அக்ஸா பள்ளிவாசலின் ஏணிப்படிகளில் சந்தித்திருக்கிறார்கள். அங்கேயே துஆவுக்காக விண்ணப்பம் செய்யும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் குழந்தையை இப்போதே சென்று பார்க்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களும் வீட்டிற்கு வருகை தந்தார்கள். வீட்டிற்கு வந்து குழந்தையின் நெற்றியில் தமது கையை வைத்து, இன்ஷா அல்லாஹ் இக்குழந்தை குணமாகிவிடும் என்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் துஆவின் அற்புதத்தால் அக்குழந்தை குணமானது. அதன் பிறகு மர்ஹூமுடைய தந்தை 70 வயது வரை உயிர் வாழ்ந்தார்கள்.

ஸலீம் அஹ்மது மலிக் சாஹிப் அவர்கள் ஆரம்பக் கல்வியை காதியானில் கற்றார்கள். பாகிஸ்தான் உருவான பிறகு சியால்கோட்டிற்குக் குடிபெயர்ந்தார்கள். அங்கேயே கல்லூரியில் கல்வி பயின்றார்கள். பிறகு கராச்சி சென்று அங்கு அறிவியல் கற்றார்கள். 1960 ஆம் ஆண்டு யூ.கே வந்து விட்டார்கள். இங்கு வெரடிங் யுனிவர்சிட்டியில் பல வருடங்களாக Geological Chemistry –ல் பேராசிரியராக இருந்தார்.

மர்ஹூம் அவர்கள் ஆரம்ப காலத்திலிருந்தே யூ.கே ஜமாஅத்தில் பல்வேறு துறைகளில் பணியாற்றியுள்ளார்கள். நீண்ட காலமாக உமூரே ஆமா செயலராகப் பணியாற்றியுள்ளார். ஜமாஅத்தின் இன்டர்நேஷனல் ரிலேஷன் துறையில் பெரும் பணியாற்றியுள்ளார். அஹ்மதிகளின் நிலைகளைக் கண்டறியும் Human Rights கமிட்டியுடன் இரண்டு முறை பாகிஸ்தான் சென்று அறிக்கை தயார் செய்யும் வாய்ப்பைப் பெற்றார். மிகப்பெரும் இன்டர்நேஷனல் எக்ஸ்போ ஒவ்வொரு வருடமும் உலகின் பல்வேறு நாடுகளில் நடத்தப்படுகிறது. மர்ஹூம் மலிக் சாஹிப் அவர்கள் 1992 ஆம் ஆண்டில் யூ.கே மற்றும் ஸ்பெயினில் ஜமாஅத் ஸ்டால் வைத்து அதை Organize செய்வதற்கான வாய்ப்பைப் பெற்றார்கள். 1997 ஆம் ஆண்டு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யா தொடங்குவது தொடர்பாக ஒரு கமிட்டியை உருவாக்கினார்கள். அதில் ஸலீம் மலிக் சாஹிபையும் இணைத்தார்கள். அதேபோன்று ஜாமிஆ அஹ்மதிய்யா யூ.கே –வின் தொடக்கத்தில் Chief Administrator ஆகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இப்பொறுப்பை 13 நவம்பர் 2005 ஆம் ஆண்டு வரை நிறைவேற்றி வந்துள்ளார்கள். தமது மரணம் வரை ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மாணவர்களுக்கு ஆங்கிலமும், வரலாறும் கற்பிப்பதற்கான நல்வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள்.

இஸ்லாமாபாத் வாங்கப்பட்ட உடன் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் வழிகாட்டுதலுக்கேற்ப அங்கு முறையாக நூலகம் அமைக்கும் வாய்ப்பைப் பெற்றார்கள். மர்ஹூம் மிக மேலான மார்க்கவாதியாகவும், தொழுகை, நோன்பு போன்றவற்றை முறையாகப் பேணக்கூடியவராகவும், மக்களை மிக

அதிகமாக நேசிப்பவராகவும் பரிவு காட்டுபவராகவும், இனிமையாகப் பேசக் கூடியவராகவும், இறைவழியில் அழைப்பாளராகவும், விருந்தோம்பல் செய்பவராகவும், கிலாஃபத்தை மிக அதிகமாக நேசிப்பவராகவும், கலப்பற்ற தூய்மை மற்றும் விசுவாசியாகவும் திகழ்ந்தார்கள்.

மர்ஹூம் தமக்குப் பின்னால் மனைவியைத் தவிர மூன்று மகள்களையும் எண்ணற்ற பேரன் பேத்திகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

மர்ஹூமுடைய சகோதரியின் மகன் அப்துல் வஹ்ஹாப் சாஹிப் கூறுகிறார்கள்: மர்ஹூம் என்னிடம் இதைக் கூறியுள்ளார். அதாவது **1960** ஆம் ஆண்டு இவர் இலண்டன் வந்தபோது அவருடைய தந்தை அவருக்கு அறிவுரை வழங்கினார்கள். மலிக் அஸீஸ் அஹ்மது சாஹிப் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தும் தமது மகனுக்கு அறிவுரை வழங்கினார்கள். அந்த அறிவுரை என்னவென்றால், **(1)** ஜமாஅத்துடன் உள்ள தொடர்பை ஒருபோதும் விட்டு விடக் கூடாது. அங்குள்ள வண்ணமயமான விஷயத்தில் காணாமல் போய்விடக் கூடாது. **(2)** குறித்த நேரத்தில் முழு விகிதாச்சாரத்துடன் சந்தா கொடுக்க வேண்டும். இதுவும் உள்ளத்தை சீர்செய்வதற்கு அவசியமாகும். **(3)** எவர் உதவி கேட்டு வந்தாலும் பின்வாங்கக் கூடாது. அதனால் எவ்வளவு பற்றாக்குறை வந்தாலும் சரியே!

நான் எனது பெற்றோரின் அறிவுரையின்படி எப்பொழுதும் செயல்பட்டு வந்தேன் என்று மர்ஹூம் கூறினார். இதை மர்ஹூமுடைய சகோதரியின் மகன் எழுதியுள்ளார். தொடர்ந்து அவர் கூறுகிறார்: ஒருமுறை அவருடைய அன்பர் ஒருவருக்கு ஒரு மிகப் பெரும் பணத்தேவை ஏற்பட்டது. மர்ஹூம் அவர்கள் தனது வீட்டை விற்று அவருடைய தேவையை நிறைவேற்றினார். ஆனால் அல்லாஹ் அவருக்கு மீண்டும் வழங்கினான். அதை விட பெரிய வீடு அவர்களுக்கு கிடைத்தது. இந்த சம்பவத்தை மர்ஹூம் அவர்கள் கூறவில்லை.

கல்வி அடிப்படையில் மிக ஞானமிகுந்தவராகத் திகழ்ந்தார்கள். நான் அவரை ஆரம்பக் காலத்தில் சந்தித்தபோது அவரைப் பற்றி எனக்கு தெரியாது. இவர் ஒரு சாதாரண அஹ்மதி ஆவார். ஆங்கிலம் கற்றுக் கொடுக்கிறார். ஆங்கில மொழியில் நன்கு புலமை இருக்கும் என்று நினைத்திருந்தேன். ஆனால் இவர் கலப்பற்ற தன்மையிலும் விசுவாசத்திலும் மிகவும் முன்னேறியவர் என்றும், எப்பொழுதும் ஜமாஅத்தின் தொண்டில் ஆயத்தமாக இருப்பவர் என்றும் கிலாஃபத்துடன் தெளிவான தொடர்புடையவர் என்றும் பற்றுடையவர் என்றும் பிறகு புரிந்து கொண்டேன்.

கல்வி ஞானத்தின் அடிப்படையில் நடமாடும் அறிவுக் களஞ்சியமாகத் திகழ்ந்தார்கள். எல்லா துறையிலும் புலமை பெற்றிருந்தார்கள். குறிப்பாக வரலாற்றில் அதிக புலமை இருந்தது. English Literature ஆக இருந்தாலும், உருதுவாக இருந்தாலும் அதிலும் அதிக ஈடுபாடு இருந்தது. ஆனால் ஒருபோதும் தன் ஞானத்தைப் பறைசாற்றியது கிடையாது. மார்க்க மற்றும் உலகக் கல்வியில் முன்னேற வேண்டுமென மற்றவர்களுக்கு எப்பொழுதும் ஆர்வமூட்டி வந்தார்.ஷ

அரசியல், கல்வி மற்றும் பாகிஸ்தானி கம்யூனிட்டியிலும் இவருக்கு பரந்த தொடர்பு இருந்தது. அந்தத் தொடர்புகளை எப்பொழுதும் ஜமாஅத்தின் நலனுக்காக பயன்படுத்தி வந்தார். மர்ஹூம் காரிஜா செயலராக இருந்தபோது லார்டு ஏஃப்ரியுடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்தினார்கள். மர்ஹூம் மூலமாகவே நமது ஜமாஅத் தொடர்பை மேற்கொண்டது. லார்டு ஏஃப்ரியுடனான தொடர்பிலும், பார்லிமெண்ட் ஹவுஸில் எனது முதல் விஸிட்டிலும் மலிக் சாஹிபின் பெரும் பங்களிப்பு உள்ளது.

அர்ஜன்டைனின் முரப்பி மர்வான் சர்வகில் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: மர்ஹூமுடைய கல்வி ஞானத்தின் காரணமாக ஜாமிஆவில் அனைத்து மாணவர்களுக்கும் மத்தியில் ஒரு குறிப்பான மரியாதை இருந்தது. எனக்கும் அவர் மீது மிகுந்த மரியாதை உண்டு. ஆனால் ஜாமிஆவில் பயின்று வெளியேறியதும் என்னுடன் ஒரு தனிப்பட்ட தொடர்பை அன்னார் மேற்கொண்டார்கள். அர்ஜன்டைனில் நான் நியமிக்கப்பட்டபோது அதிக மகிழ்ச்சி அடைந்தார். நீங்கள் ஒரு முன்மாதிரி முபல்லிக் ஆவீர்கள். ஆகவே அதிக வேலை செய்ய வேண்டிய தேவை உள்ளது. மேலும் ஜமாஅத்தின் பெயரை ஒளிரச் செய்ய வேண்டும். நல்ல முறையில் தப்லீக் செய்ய வேண்டும். குறிப்பாக அங்குள்ள மொழியைக் கற்றறிய வேண்டும். செய்தித் –தாள்களில் உங்களுடைய கட்டுரை வெளியாகும் வண்ணம் அந்த மொழியில் புலமை பெற வேண்டும் என்றார்கள்.

இது அவர்களின் கல்வி ஞானத்தின் மீதான பேரார்வமாக இருந்தது. தமது மாணவர்களை தம் வீட்டிற்கு விருந்துக்கு அழைப்பார்கள். அதன் பிறகு தம்முடைய நூலகத்திலும் அழைத்துச் செல்வார்கள். அவருடைய தனிப்பட்ட சொந்த நூலகமும் இருந்தது. பல மாணவர்களும், முரப்பிகளும் எனக்கு இது குறித்து எழுதியுள்ளார்கள். பிறகு மாணவர்களைப் பார்த்து, என் வீட்டிற்கு வந்துள்ள உங்களுக்கு என் சார்பாக பரிசு என்னவென்றால், இந்த நூலகத்திலிருந்து நீங்கள் விரும்பும் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொள்ளலாம். ஆகவே என் சார்பாக அன்பளிப்பு என்பார்கள். ஜாமிஆ ஒரு அசாதாரணமான துறையாகும். ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இதன் மீது மிகுந்த எதிர்பார்ப்பு வைத்துள்ளார்கள். எனவே இத்துறையுடன் தொடர்புடைய வாழ்வை அர்ப்பணித்தவர்கள் அசாதாரண கல்வித் தரத்தைப் பெற வேண்டும் என்று எப்போதும் கூறுவார்கள்.

மர்வான் சாஹிப் தொடர்ந்து எழுதுகிறார்: நான் அர்ஜன்டைன் கிளம்புவதற்கு முன்பு எனக்கு அறிவுரை வழங்கினார்கள். ஸ்பானிஷ் மொழியில் எந்த அளவுக்கு புலமை பெற வேண்டும் என்றால், உங்களுடைய கட்டுரைகள் வெளியாக வேண்டும் என்று குறிப்பாக கவனமூட்டினார்கள். தனக்கு எப்போதும் கடிதம் எழுதி வர வேண்டும் என்றும் கூறினார்கள். நான் எப்பொழுதாவது சோம்பேறித்தனம் காட்டினால் அவர்களே என்னை தொடர்பு கொண்டு கடிதம் எழுதும்படி கவனமூட்டுவார்கள்.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அதேபோன்று அவருடைய உறவினர்கள், பிள்ளைகள் மற்றும் சந்ததிகளுக்கும் கிலாஃபத்துடனும், ஜமாஅத்துடனும் விசுவாசமான தொடர்பை மேற்கொள்ள வாய்ப்பளிப்பானாக. ஆமீன்.

தொழுகைக்குப் பிறகு இவர்களின் ஜனாஸா தொழுகையைத் தொழ வைப்பேன்.

**- தமிழாக்கம் : மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது**

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 12 November 2020 Issue No. 46

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**போரில் நீங்கள் பெண்களை, குழந்தைகளை, முதியோர்களை கொல்வதற்கு உங்களுக்கு அனுமதி இல்லை. உடன்படிக்கையை முறிப்பதும், ஏமாற்றுதலும், கொலை செய்யப்பட்டவர்களின் மூக்கையும் காதுகளையும் வெட்டுவதும், பாதிரிமார்களையும், பண்டிதர்களையும், சீக்கிய மத குருமார்களையும் கொல்லுவதற்கு உங்களுக்கு அனுமதியில்லை. எந்த தோட்டத்தையும், மரத்தையும் வெட்டுவதற்கும், எந்த கட்டடத்தை இடிப்பதற்கும் அதை தீயிட்டுக் கொளுத்துவதற்கும் உங்களுக்கு அனுமதி இல்லை என இஸ்லாம் கூறுகிறது. எப்போதாவது இந்த வழிகாட்டல்களுக்கு மாறாக செயல்பட்டால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கடுமையான கோபத்தை வெளிப்படுத்தினார்கள்.**

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

“உலக அரசாங்கங்கள் மற்ற நாடுகளில் நுழையும்போது கண்மூடித்தனமாக அநீதியிழைக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அரசாங்கத்தின் மீதுள்ள பீதி நிலைபெற வேண்டும் என்தற்காக மட்டுமே அவ்வாறு செய்கின்றார்கள். ஆனால் இஸ்லாம் அதற்கு அனுமதி அளிப்பதில்லை.

அவ்வாறே ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளில் நீங்கள் நுழையும்போது மக்களுக்கு எளிமையாக இருக்கும் கட்டளைகளை இடுங்கள்; துன்பம் இருக்கக் கூடாது. மேலும் கூறினார்கள்: படைகள் பாதைகளில் செல்லும் போது பொதுவான பயணிகளின் வழிகள் தடைபடாத அளவுக்கு செல்லுங்கள்.

ஒரு நபித்தோழர் கூறுகிறார்: ஒருமுறை மக்கள் தமது வீடுகளிலிருந்து வெளியே வர முடியாத அளவுக்கு பாதைகளில் நடக்க கஷ்டமாக இருக்கும் அளவுக்கு படை சென்றது. அப்போது, எவர் வீடுகளை அடைத்தாரோ பாதையை அடைத்தாரோ அவருடைய ஜிஹாது ஜிஹாதாகவே இருக்காது என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள்.

சுருக்கமாக, போரில் பெண்களை கொலை செய்வதற்கு, குழந்தைகளை கொலை செய்வதற்கு, முதியோர்களை கொலை செய்வதற்கு உங்களுக்கு உரிமை இல்லை. உடன்படிக்கை மீறுவதற்கு உங்களுக்கு அனுமதியில்லை. ஏமாற்றுவதற்கு உங்களுக்கு உரிமை இல்லை. கொலை செய்யப்பட்டவரின் மூக்கு, காதுகளை வெட்டுவதற்கு உரிமையில்லை. பாதிரிமார்கள், பண்டிதர்கள், சீக்கிய மத குருமார்களைக் கொல்வதற்கு உங்களுக்கு உரிமை இல்லை. எந்த தோட்டத்தையும், மரத்தையும் வெட்டுவதற்கு உங்களுக்கு உரிமை இல்லை. எந்த கட்டடத்தை இடிப்பதற்கும், அதை தீயிட்டுக் கொளுத்துவதற்கும் உங்களுக்கு உரிமையில்லை என இஸ்லாம் கூறுகிறது. எப்போதாவது இந்த வழிகாட்டல்களுக்கு மாறாக செயல்பட்டால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கடும் கோபத்தை வெளிப்படுத்தினார்கள்.

அரபி வழக்கப்படி, பெண்களும் போரில் கலந்து கொண்டனர். (பெண்களாகிய) அவர்கள் மற்றவர்களை கொலை செய்தனர். கண்டிப்பாக அவர்களும் கொலை செய்யப்பட்டனர். ஆனால் ஒரு போருக்குப் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பெண்ணின் சடலத்தைக் கண்டபோது அவர்களின் முகத்தில் துக்கத்தின், கோபத்தின் அடையாளங்கள் தென்பட்டன. இஸ்லாம் இதை விரும்பவில்லை எனக் கூறினார்கள். இந்த செயல் இஸ்லாமிய போதனைக்கு மாறானதாகும்.

*(புகாரி தொகுதி 2 கிதாபுல் ஜிஹாது வல் யஸ்ர்)*

உஹது போரில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு வாளை எடுத்து வைத்தார்கள். இதன் உரிமையை வழங்குவதாக வாக்குறுதி கொடுப்பவருக்கு நான் இதனை வழங்குவேன் எனக் கூறினார்கள். பலர் அந்த வாளை வாங்குவதற்கு எழுந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அபூதஜானா அன்ஸாரி (ரலி) அவர்களுக்கு அந்த வாளைக் கொடுத்தார்கள். போரில் ஓரிடத்தில் மக்கவைச் சார்ந்த சில போர் வீரர்கள் அபூதஜானா (ரலி) அவர்களைத் தாக்கினார்கள். அவர்கள் அவர்களுடன் போர் செய்தபோது ஒரு போர் வீரர் மிகவும் ஆவேசத்துடன் போரில் பங்கு கொள்வதைக் கண்டார். ஹஸ்ரத் அபூதஜானா (ரலி) அவர்கள் வாளை உருவி அவரை நோக்கிப் பாய்ந்தார்கள். பிறகு அவரை விட்டு விட்டு திரும்பி வந்து விட்டார்கள். அவர்களின் ஒரு நண்பர், அவரிடம் நீங்கள் ஏன் அவரை விட்டு விட்டீர்கள் எனக் கேட்டார். அதற்கு அவர், நான் அவருக்கு அருகில் சென்ற போது அவர் வாயிலிருந்து ஒரு வார்த்தை வந்தது. அதிலிருந்து அவர் ஆண் அல்ல; பெண் ஆவார் என எனக்குத் தெரிந்தது. அவருடைய கணவர், எந்நிலையிலும் அவள் போர் வீரர்களைப் போன்று போரில் கலந்து கொண்டிருந்தாளே! அவளை ஏன் விட்டீர்கள் எனக் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் அபூதஜானா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களால் எனக்கு தரப்பட்ட வாளை ஒரு பலவீனமான பெண்ணின் மீது பயன்படுத்துவதை என் உள்ளம் சகித்துக் கொள்ளவில்லை எனக் கூறினார்.

சுருக்கமாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பெண்களுக்கு மரியாதை கொடுப்பதையும், மதிப்பளிப்பதையும் எப்போதும் போதித்து வந்தார்கள். அதன் காரணமாக மிகவும் தைரியமாக முஸ்லிம்களுக்கு நஷ்டமிழைக்க முயற்சி செய்து வந்தனர். ஆயினும் முஸ்லிம்கள் இந்த விஷயங்களை சகித்துக் கொண்டு வந்தனர். ஒரே ஒரு பெண் தான் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை இஸ்லாத்திற்கு எதிராக போர்களில் கலந்து கொண்டார். மேலும் உயிர் தியாகிகளின் மூக்கையும் நாக்கையும் வெட்டி விடுவதற்கு மிகவும் பிரசித்தி பெற்றவளாக இருந்தாள். அதாவது ஹிந்தா. மக்கா வெற்றியின்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவளை மட்டும் கொலை செய்யக் கட்டளை இட்டார்கள். ஆனால் அவள் மற்ற பெண்களுடன் வந்தாள். மேலும் முஸ்லிமாகி விட்டாள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவளைப் பற்றியும் ஒன்றும் சொல்லவில்லை. ஏனெனில் பாவமன்னிப்பு அவளுடைய அனைத்து பாவங்களையும் கழுவி விட்டது எனக் கூறினார்கள்.

*(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 421-422 காதியான் பதிப்பு 2010)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad